Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை (25-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:119

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி

## கல்வி வலயங்கள் முன்னால் தொண்டர் ஆசிரியர் மறியல்




யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்கள் முன்பாகவும் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கல்வி வலயங்களின் பணிகள் முற்றாகச் செயலிழந்தன.

மிக விரைவில் தமக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும். என்று கோரியே தொண்டர் ஆசிரியர்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். நியமனம் தொடர்பாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வந்த போதும் அவை நிறைவேற்றப்படாமை குறித்து அவர்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய ஐந்து கல்வி வலயங்கள் முன்பாகவும் காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணிவரை மறியற் போராட்டம் இடம்பெற்றது.

யாழ். கல்வி வலயத்தின் முன்பாக நடைபெற்ற மறியற்போராட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்



அதிர்ஷ்டசாலிகளின் விவரம் 9ஆம் பக்கத்தில்

'உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் - 2003' பரிசுப் போட்டியின் அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வு 'உதயன்' அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ்.மாநகர முன்னாள் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் மாபெரும் இறுதிப்போட்டியில் வென்ற அதிர்ஷ்டசாலிகளை தெரிவு செய்கின்றார். உதயனின் செய்தி ஆசிரியர் கா.குமாரதாஸன் மற்றும் உதவி ஆசிரியர் தே.பிரேமானந்த் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# ஜப்பானில் இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்கள் செயலுருப் பெறவேண்டும்

## யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்த இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்25

**ஜப்பான் பேச்சுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்கு வருவதைக்காண ஆசைப்படுகின்றோம். மனிதவுரிமைப் பேணல் சகல அரசியல் கட்சிகளுக்கும் இடங்கொடுத்தல் போன்ற விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே, அவை நடைமுறைக்கு வரவேண்டும்.**

**கொழும்பிலுள்ள இந்திய கலாசார நிலையத்தில் வைத்து யாழ்.நூலகத்துக்கு ஒரு தொகை நூல்கள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்ட வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இந்தியத் தூதுவர் நிருபம் சென் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியதாவது:-

விதைக்கும் விதை நல்நிலத்தில் இடப்படவேண்டும். அப்போதுதான் அதன் பயனை அடையமுடியும். அந்த ரீதியிலேயே நாம் யாழ்நூலகத்துக்கு இந்த நூல்களை வழங்குகின்றோம்.

சிங்களத் தீவுக்கு பாலம் அமைக்க வேண்டும் என்று மகாகவி பாரதி கண்ட கனவு இன்று நனவாகும் நிலை உருவாகியுள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் சகல வழிகளிலும் ஓர் உறவுப்பாலம் அமைய வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகிறார்.

இலங்கை அறிஞர்கள் பலர் நல்ல நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்கள்.

இந்தியாவின் தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி நூலகத்தில் விலை மதிக்க முடியாத பல அரிய நூல்கள் இருக்கின்றன. (14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை தமிழர்களின் அபிலாஷையைப் பாதிக்காது

### அமைச்சர் நூர்டீன் மஷூர் தெரிவிப்பு

சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென வலியுறுத்துவது, தமிழ் மக்களின் அபிலாஷைகளில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாதென, வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மஷூர் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதுவே எமது

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி—ஜே.வி.பி. இடையே கருத்து முரண்பாடுகள்

தொடர்ந்து பேச்சு என்கிறார் பொதுச் செயலாளர்

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை நீக்குவதற்காக தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. எனவே, கூட்டு ஒப்பந்தம் 27ஆம் திகதி கைச்சாத்திடப்படமாட்டாது என சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:- (14ஆம் பக்கம் பார்க்க)

## 15 வயதுச் சிறுமி மீது வல்லுறவு; இளைஞன் பொலீஸாரால் கைது

### நுணாவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

நுணாவில் பகுதியில் 15 வயதுச் சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நுணாவில் மேற்கில் உள்ள பாழடைந்த வீடொன்றுக்குள் சிறுமியை அழைத்துச் சென்ற பிரஸ்தாப இளைஞர் அவரை வல்லுறவுக்கு உட்படுத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் மூன்று சடலங்கள் குடத்தனையில் ஒதுங்கின

கரவெட்டி.மார்ச்25

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த வியாழனன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சீனநாட்டு மீன்பிடி றோலரில் இருந்த சீன மீனவர்களின் சடலம் என நம்பப்படும் மேலும் மூன்று சடலங்கள் குடத்தனைப் பகுதியில் நேற்றுக் கரை ஒதுங்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலையும் நான்கு சடலங்கள் கரை ஒதுங்கியிருந்தமை தெரிந்ததே.

(14ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறையில் பயங்கரம்

## கர்ப்பிணிப் பெண் தலையில் கோடரியால் தாக்கி கொலை

### சந்தேகத்தில் கணவன் கைது!

ஊர்காவற்றுறை,மார்ச்25

ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தலையில் கோடரியால் தாக்கப்பட்டு மிகக் கொடூரமானமுறையில் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பெண்ணின் கணவன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை மேற்கு வீதியில் வசித்து வந்த 6 பிள்ளைகளின் தாயாரான ம.செம்பற்சோதி (வயது38) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மேற்படி பெண், அவரது கணவரினால் அடிக்கடி அடித்துத் துன்புறுத்தப்பட்டு வந்துள்ளார். இதனால் அவர் சிறிது காலம் தன் கணவனை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். உறவினர்களின் வற்புறுத்தலினால் மீண்டும் கணவனுடன் இணைந்து வாழ்ந்து வந்துள்ளார்.

சம்பவதினம் அன்று இரவு திடீரென அந்த வீட்டில் இருந்து குழந்தைகளின் வீறிட்ட அலறல் சத்தம் கேட்டுள்ளது. ஆனால், இது நாளாந்த சண்டையாக இருக்கும் என நினைத்து அயலவர்கள் எவரும் உதவிக்கு வரவில்லை.

நீண்ட நேரமாகக் குழந்தைகளின் அழுகை கேட்டபோதும் தாயின் குர

(14ஆம் பக்கம் பார்க்க)

# நூலகப் புனரமைப்புக்கு செலவிட்ட நிதி நஷ்டஈடாகக் கிடைத்திருக்க வேண்டியதே

## சி.வி.கே.சிவஞானம் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்25

. எரிக்கப்பட்ட யாழ்.நூலகத்திற்கு நஷ்டஈடாக 1 கோடி 5லட்சம் ரூபா வழங்கப்படவேண்டும் என்று 1983 ஆம் ஆண்டு லயனல் பெர்னாணடோ தலைமையிலான குழு சிபார்சு செய்தது. ஆயினும், 20 லட்சம் ரூபாவே நஷ்டஈடாக வழங்கப்பட்டது. அப்போது மிகப்பெரிய தொகையான மிகுதி 80 லடசம் ரூபாவும் வழங்கப்படவில்லை. இப்போது ஆட்சியில் உள்ள அரசாங்கமும் முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கமும் தாம் யாழ். நூலகத்தைப் புனரமைப்பதற்கு நிதியை வழங்கியுள்ளோம் என தம் பட்டமடிக்கின்றன. முன்னர் 80 லட்சம் ரூபா வழங்கப்படாமல் உள்ளது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. எனவே, தற்போது புனரமைப்புக்குக் கிடைத்த நிதியை நஷ்டஈடாகவே கருதவேண்டும்.

-இவ்வாறு றோட்டறிக் கழகத்தின் விருது வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பல நோ.கூ. சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். றோட்டறிக் கழகத்தின் தலைவர் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் லண்டன் லடார் நிறுவனம் அன்பளிப்புச் செய்த புத்தகங்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் றோட்டரக் கழகங்களின் செயற்பாடுகளைக் கௌரவித்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் இன்றறக்ட் கழக உறுப்பினர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சி.வி.கே.சிவஞானம் பேசுகையில் -

யாழ். மாநகரசபையோ அல்லது வேறு எந்த தனிநபரோ யாழ். நூலக புனரமைப்புப் பணிகளை முன்னின்று மேற்கொள்ளவில்லை. ஆகவே, அவர்கள் இதற்கு சொந்தம் கொண்டாட முடியாது. நூலகம் உரிய வேளையில், உரிய முறையில் திறந்து வைக்கப்படும் - என்றார்.

யாழ்.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

எமது இனத்தின் மீது ஒரு திட்டமிட்ட கல்வி ஒடுக்குமுறை தொடர்நது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எமது கல்வி மற்றும் எமது வரலாறு தொடர்பான அறிவை மழுங்கடிப்பதற்காக திட்டமிட்டு செய்யப்பட்டதுதான் நூலக எரிப்பு. தொடர்ந்தும் எமது கல்வி ஒடுக்கப்பட்டு வருவதை நாம் அனுமதிக்கமுடியாது எமது கல்வியை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்கள், வானொலி நிகழ்ச்சிகள் என்பன எமது மாணவர்களை மட்டுமல்லாது ஆசிரியர்களையும் வெகுவாக மாற்றிவிட்டது. இதனால் வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது. எனவே, எமது தேசத்தின் கல்வியை வளர்க்க நாம் ஒன்று திரண்டு செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம் - என்றார்.

இவ்விருது வழங்கும் வைபவத்தில் லண்டனிலுள்ள 'லடார்' நிறுவனத்தினால் பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட நூல்களும் கையளிக்கப்பட்டன.

இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். ப.நோ.கூ. சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி.கே.சிவஞானமும் சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் க.சிவராமலிங்கம், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-8)











யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் விருது வழங்கும் வைபவம் யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சி.வி.கே. சிவஞானம் மாநகர சபை நூலகத்துக்கான புத்தகங்களை மாநகர சபை ஆணையாளரிடம் வழங்குவதை முதலாவது படத்திலும் -

றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் பாடசாலை மாணவி ஒருவருக்கு விருது வழங்குவதை இரண்டாவது படத்திலும் -

யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் க.சிவராமலிங்கம், யாழ். பல்கலைக்கழகத்துக்கான புத்தகங்களை வழங்குவதை மூன்றாவது படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# முஸ்லிம் எம்.பிக்கள் விரைவில் நோர்வே தூதரை சந்தித்து பேச்சு

கொழும்பு,மார்ச்25

வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம தரப்புப் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு அவரிடம் அவர்கள் கோரவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாகவும் அவர்கள் வெஸ்ட்பேர்க்கிடம் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# அனைத்து ரயில்வே ஊழியர்களும் நாளை சுகவீன லீவுப் போராட்டம்

கொழும்பு,மார்ச்25

நாளை 26ஆம் திகதி சகல ரயில் ஊழியர்களும சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவிருக்கின்றனர். தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தவறியிருப்பதை ஆட்சேபித்தே அவர்கள் இப்போராட்டத்தை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடும் ரயில்வே ஊழியர்கள், நாளை காலை 10மணிக்கு மருதானை ரயில் நிலையம் எதிரே ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதெனவும் தீர்மானித்திருக்கின்றனர்.

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து அரசாங்க ஊழியர்கள் சங்கங்கள் நாளை நடத்தத் திட்டமிட்டிருக்கும் அடையாள வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு வழங்கப்படுமென வும் ரயில்வே ஊழியர் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு தெரிவித்திருக்கிறது. (ம)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர் பதவிக்காலம் முடிவு

கொழும்பு,மார்ச்25

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரினதும் அங்கத்தவர்களினதும் ஐந்து வருட பதவிக்காலம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது.

இதனால், புதிய தலைவரும் அங்கத்தவர்களும் நியமிக்கப்படும்வரை ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் அதன் செயலாளரிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆணைக்குழுவின் புதிய தலைவர் பதவிக்கு டாக்டர் தீபிகா உடுகம, டாக்டர் எஸ்.ஏ.செய்னுதீன், என். செல்வகுமாரன் ஆகியோரின் பெயர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

அரசமைப்புச் சபை இப்பெயர்களை ஆராய்ந்து அதன் சிபாரிசுகளை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கும். ஜனாதிபதி அதன்பின்னர் ஆணைக் குழுவின் தலைவரை நியமிப்பார். (ம)

# சுகாதார சேவையாளர்களும் அடையாள வேலைநிறுத்தம்

காரைதீவு,மார்ச்25

ஸ்ரீலங்கா குடியரசு சுகாதார சேவையாளர் சங்கம் நாளை நாடளாவியரீதியில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. வைத்தியசாலைகளில் சுகாதார ஊழியர்கள் சமுகமளிக்கமாட்டார்கள் என சுகாதார சேவையாளர் சங்கத் தலைவர் ஏ.டி. விமலரத்ன, செயலாளர் எச்.எச்.கேவட் சில்வா ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட கரையோரத்திலுள்ள சகல வைத்தியசாலைகள், சுகாதார நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு சுகாதார ஊழியர்கள் நாளை சமுகமளிக்கமாட்டார்கள் என மாவட்ட அமைப்பாளர் கே.எஸ்.இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார். நாளை சுகாதார ஊழியர்கள் பகல், இரவு சேவையில் ஈடுபடாமல் சுகவீன விடுமுறையைக் கோருவர். இது தொடர்பாக நிறுவன தலைமை அதிகாரிக்கு கட்டாயம் அறிவிக்கப்பட வேண்டும். கொழும்பில் நடத்தப்படும் ஊர்வலத்தில் அவர்கள் கலந்துகொள்வர் என்றும் அவர் கூறினார். (ம)

# சீன கப்பல் அழிக்கப்பட்டது குறித்து அந்நாட்டு அரசுக்கு விரைவில் அறிக்கை

கொழும்பு,மார்ச்25

அண்மையில் சீன மீன்பிடிக் கப்பல தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கை ஒன்றினை விரைவில் சீன அரசிடம் சமர்ப்பிக்கப்போவதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் தப்பி வந்தவர்களிடம் விசாரித்தும் இது தொடர்பான கண்காணிப்புக் குழுவின் அறிக்கையைக் கொண்டும் புதிய அறிக்கை ஒன்றினை தயாரித்து இலங்கைக்கான சீனத் தூதுவர் ஊடாக சீன அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க விருப்பதாக அமைச்சர் கூறினார்.

இப்பொழுது கரையொதுங்கிவரும் சீனர்களின் சடலங்களை சீனத் தூதுவர் ஊடாக சீனாவுக்கு அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

# அரச, தனியார்துறை ஊழியர்கள் நாளை அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு,மார்ச்25

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப சம்பள உயர்வு வழங்குதல், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அரச வங்கிகள் தனியார் மயப்படுத்தப்படககூடாது ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் நாளை (26ஆம் திகதி) ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவிருக்கின்றனர்.

அரச, தனியார்துறை தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்கின்றன. இதனால், அரசாங்க அலுவலகங்கள், அரச வங்கிகள், ரயில் சேவை, தபால் சேவை ஆகியன ஸ்தம்பிக்குமென கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளர் குயின்டஸ் லியனகே தெரிவித்தார்.

முதற்றடவையாக இலங்கை வர்த்தக ஊழியர் சம்மேளனமும் அரச சேவை தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்த வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்கின்றது. (ம)

# வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,மார்ச்25

ஈராக் மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாம் என்பதால் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்கள் உலகெங்கிலும் நடத்தப்பட்டு வரும் இவ்வேளையில் கொழும்பிலும் போராட்டங்கள் நடத்தப்படலாம் என்பதனால் கொழும்பிலுள்ள ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதரகங்களின் முன்பாகவும் பெருமளவு பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ம-4)

# உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம் - 2003

# போட்டி முடிவுகள்

## மாபெரும் இறுதிப் போட்டியில் பரிசு வென்றவர்கள்

மைக்ரோ பிசி தரும் முதலாம் பரிசான கணனியை வெல்லும் அதிர்ஷ்டசாலி

**செல்வரட்ணம் நிஷாந்தன்**
இல. 19, பி.ஏ.தம்பி லேன்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(766793932V)





சிங்கர் நிறுவனம் தரும் இரண்டாம் பரிசான தொலைக்காட்சியை வெல்லும் அதிர்ஷ்டசாலி

**இராஜவரோதயம் இராகுலன்**
'பொன் அலரி'
இணுவில் மேற்கு, இணுவில்.
(0906030645)



ஷார்ப் நிறுவனம் தரும் மூன்றாம் பரிசான வானொலியை வெல்லும் அதிர்ஷ்டசாலி

**கணேசலிங்கம் யதுராஜ்**
79/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
(852912103V)

பரிசுகள் வழங்கப்படும் திகதி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## எக்ஸ்போ நிறுவனம் தரும் ஆறுதல் பரிசான விமான ரிக்கெட்டுக்களை வெல்லும் அதிர்ஷ்டசாலிகள்

1. தே.துஷ்யந்தினி குருஸ்
பற்றிமா வீதி, மாதகல்.
(23006060)
2. கந்தசாமி கோமதன்
சங்கத்தானை, சாவகச்சேரி.
(841422260V)
3. கணேசமூர்த்தி மயூரன்
அல்வாய்.
(821311275V)
4. நாகராஜா பிரேம்குமார்
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.
(800380383V)
5. துரைசிங்கம் கேசவன்
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு.
(586062670V)
6. வடிவேலு துளசிகா
வேலணை கிழக்கு, வேலணை-4.
(592743825V)
7. பாலசுப்பிரமணியம் வாகீசன்
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
(813181398V)
8. பாலசிங்கம் அருள்குமரன்
கோவிலாக்கண்டி, கைதடி.
(812371268V)
9. வேலும்மயிலும் மதிவதனன்
அம்மன் கோவிலடி, வதிரி, கரவெட்டி.
(742043640V)
10. பாலசுந்தரம் பாலமுரளி
சந்தை வீதி, உடுப்பிட்டி.
(842232422)

## லுமாலா நிறுவனம் தரும் 'சுப்பர் சிக்ஸ்' பரிசான சைக்கிள்களை வெல்லும் அதிர்ஷ்டசாலிகள்

1. எஸ்.சத்தியாதேவி
334, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(627662270V)
2. ந.லோஜனவனிதை
கண்டி வீதி, சாவகச்சேரி.
(715423871)
3. நாகராசா கிருசாந்தினி
முகாம் வீதி, ஊர்காவற்றுறை.
(580033091V)

## அருண்ஸ் தரும் பரிசுகள் வெற்றோர்

1. செபஸ்தியாம்பிள்ளை யோசேப்
அல்வாய் வடக்கு, அல்வாய்.
(750773281V)
2. க.குகசூரியர்
11/27, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
(831900512V)
3. பரமேஸ்வரா உமேஸ்குமார்
கற்பக்கொணை, உடுவில்.
(741369I194V)
4. ஜயாளவதனி பஞ்சவர்ணம்
உடுப்பிட்டி வீதி,
தொண்டமனாறு.
(736692023V)
5. கிருபானந்தன் பிரதீபன்
7ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
(832591203V)
6. சபாபதி தனபாலசிங்கம்
61, பிறவுண்வீதி, நீராவியடி.
(0902002966)
7. கந்தசாமி கடம்பசோதி
64, கனகபுரம், கிளிநொச்சி.
(811773301V)
8. பிரசாந்தினி பாலசுப்பிரமணியம்
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
(835723445V)
9. பத்திமாநாயகம் கிமெல்
ஆதியாமலை, உடுப்பிட்டி.
(820233280V)
10. நவரட்ணராஜா சசிந்திரன்
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
(781213942V)
11. இன்பகரன் ஷிந்துஜன்
கல்வயல், சாவகச்சேரி.
(756941283V)
12. மர்லின் வேஜ்ஜா யோசப்
28, சுவாட்ஸ்லேன், சுண்டிக்குளி.
(633632936V)
13. J.நிரோஸ்லெபேசன்
இல.20, 5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
14. முத்துலிங்கம் சுஜந்தன்
வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.
(533613411V)
15. கோபாலகிருஷ்ணன் ருசியந்தன்
செல்வி வளவு,
இலையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
(773654212V)
16. தம்பிஜயா சர்மிளா
கண்டிறோட், அரியாலை.
(0902006983)

(13ஆம் பக்கம் பார்க்க)

## ஏசியன் நிறுவனம் தரும் தினம் ஒரு பரிசை வெல்லும் அதிர்ஷ்டசாலிகள்

1. கார்த்திகேசு கார்த்திக்
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
(0901025418)
2. எவரும் சரியான விடை எழுதவில்லை.
3. பரநிருபசிங்கம் ஈசனார்
310, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.
(650920112V)
4. சாந்தகுமார் சரோஜினிதேவி
273/1, நாவலர் றோட், ஆனைப்பந்தி.
(598312168V)
5. சி.குளசிராம்
போக்காலை வீதி, உடுப்பிட்டி.
(833412779V)
6. அச்சுதானந்தன் ராதை
புதுவளவு, V.V.T.
(828301764V)
7. நடராஜசுந்தரம் பிரவீனா
சுதுமலை.
(0905010042)
8. திருப்பதி மயூரன்
36, தம்பிலேன், வண்ணார்பண்ணை.
(0901035442)
9. சஞ்யிகா சுந்தரமூர்த்தி
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(843561665V)
10. கிட்டிணபிள்ளை முரளிதரன்
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.
(860931270V)
11. வை.டனுசாந்தினி
297, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(806691623V)
12. மா.மோகனகாந்
பெரியமாவடி, சாவகச்சேரி.
(811310419V)
13. எஸ்.ஓம்பிரகாஸ்
219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(821182980V)
14. அருளானந்தம் ஜீவதர்ஷன்
37, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு.
(821861969V)
15. குணரத்தினம் குபேரன்
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.
(850611971V)
16. T.சிவகுமார்
687/6, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(792773451V)
17. யசித்திரா யோகரட்ணம்
13/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(835110346V)
18. செல்வநாயகம் செந்தூரன்
695, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(090126869V)
19. ஜெயந்தினி யோகேஸ்வரன்
களபாவோடை, ஏழாலை.
(798332767V)
20. கனகசபை பிரசாத்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(831590204V)
21. கணேசன் சரவணபவன்
21, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(563572054V)
22. திருமதி ஞ.சர்மிளா
இல.883, நாவலர் வீதி, அரியாலை.
(726413860V)
23. துரைசிங்கம் அமலன்
தம்பசிட்டி, பருத்தித்துறை.
(0908016175)
24. சுகுமாரன் சுதர்ஸன்
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
(553460980V)
25. மார்க்கண்டு ஜெய்கிருஸ்ணன்
பழம்றோட், கோப்பாய் தெற்கு.
(85001197)

(13ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 08 - 1923



மறைவு 05 - 04 - 2002

### திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்

எமது வாழ்வுயர தன் வாழ்வை உரமாக்கிய அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*V.H. லேன்,*
*இருபாலை கோப்பாய்.* (15911)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 12 - 1929



மறைவு 28 - 03 - 2000

### திருமதி சுகிர்தரத்தினம் தம்பையா

திதி: 25-03-2003

*அன்பினால் எம்மை ஆண்டு*
*ஆறாத்துயரில் விட்டுச் சென்ற - எங்கள்*
*அன்புத் தெய்வத்தை காலங்கள் சென்றாலும்*
*மறப்பதற்கு நாம் இல்லை - என்றும்*
*எம் நெஞ்சினில் நிறைந்திருக்கும் உமது நினைவுகள்.*

(15911)

*வி.ரி.கதிர்காமநாதன்,*
*"கலையகம்" கலைநகர், சித்தன்கேணி.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரபந்தாடடம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றின் இறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும் இவ் இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார்.

இதில் 15வயது, 17வயது மற்றும 19வயதுப் பிரிவினர்களுக்கான இறுதி யாட்டங்களே நடைபெறவுள்ளன.

(ஒ-5-28)

## மருதங்கேணியில் வீடுகட்டித்தர ஜி.ரி.இசற் திட்டம்

செம்பியன்பற்று,மார்ச்25

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 175 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

இதேவேளை, வெற்றிலைக்கேணி பகுதியில் 175 குடும்பங்கள் இல்லாத பட்சத்தில் வேறு பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3ஏ)

## தேவை

தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

**துர்க்கா தையல் அகம்**
360, கோவில் வீதி,
(15924) நல்லூர்.

விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

25-03-2003



### செல்வி செ.பிறிம்ஜா

யாழ்ப்பாணம், கேசாவில் வீதி மற்றும் தட்டாதெருவை வசிப்பிடமாகக் கொண்ட

**செல்வராசா யசோதராணி**

தம்பதியினரின் செல்வப் புதல்வி

**செ.பிறிம்ஜா**


தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை தனது அப்பா, அம்மாவுடன் HOLLAND இல் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் அருள்பெற்று பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்பும் பெற்று வாழ்கவென உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

*சடாச்சரம் அன் சன்ஸ்*
*நகைத் தொழிலகம்,*
*தட்டாதெரு,யாழ்ப்பாணம்.*

(15911)

ச.சடாச்சரம் (அம்மப்பா)
க.சுஜன் (அண்ணா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



24-03-2003 நேற்று உதவித் தபாலதிபராகப் பதவியுயர்வு பெற்ற

### திரு.அருமைத்துரை அருளானந்தசோதி

(செயலாளர், பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்கம்)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாமும் பெருமையடைகின்றோம்.

க. வேலும்மயிலும்,
மு. வன்னியசிங்கம்,
கி. பூபாலன்,
பி. கிருஷ்ணானந்தன்,
சி. ரவிச்சந்திரன்,
க. கமலதாஸ்,
மா. பாஸ்கரன்.

*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.* (15920)


# சுடர் ஒளி 30.03.2003 இதழில்

விலை 14/=




- பேச்சுவார்த்தை தாமதமானால் உலக நாடுகளின் மனம் மாறலாம்.
- உலகநாடுகளின் எதிர்ப்பையும் மீறி ஈராக்கை அழிக்க புஷ் திடசங்கற்பம்.
- சுயலாபத்துக்காக அப்பாவிகளைக் கொல்வது பயங்கரவாதமில்லையா? - (நேரடி)
- வளைகுடாவில் யுத்த மேகம் யாழ்.குடாவில் பதுக்கல் அமோகம்.
- பொறுமை காக்கும் புலிகளை பொங்கி எழ வைக்க முயற்சி.
- புலிகளின் கப்பலை அழிக்க பின்னணியில் இயங்கிய கரம் எது?

மற்றும் மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், இணையத்தளங்களிலிருந்து, சினிமா, விளையாட்டு, சிறுவர் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

உதயன்

# குத்துக்கரணங்களுக்கு பின்னணி யார்?

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசு, விடுதலைப் புலிகளுடன் மட்டுந்தான் பேச வேண்டும் என்று கூறினோமே தவிர, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள்தான் என்று நாங்கள் ஒருபோதும் கூறியிருக்கவில்லை".

- இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய தலைவருமான வீ.ஆனந்தசங்கரி.

2001 டிசெம்பர் தேர்தல் பிரசாரக் காலத்தில் தமது இந்த நிலைப்பாட்டை ஆனந்தசங்கரி தெளிவுபடுத்தியிருந்திருப்பாரேயானால் அவருக்கு உரிய இடத்தை யாழ்ப்பாண மக்கள் ஒதுக்கிக் கொடுத்திருப்பார்கள். அவரது உண்மைச் சொருபம் காலங்கடந்து மக்களுக்கு தெரிய வருவதுதான் இன்றைய குழப்பத்திற்குக் காரணம்.

கடந்த பொதுத் தேர்தலில் புலிகளுக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டுடன் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றுபட்டு வந்தபோது தமிழ்மக்கள் புளகாங்கிதம் அடைந்துதான் போனார்கள். ஆனால், கூட்டமைப்பில் ஒட்டிக்கொண்டு தலைவலியும் ஏறிவரும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதும் உண்மைதான்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் தலைமை வேட்பாளர் - முதன்மை அபேட்சகர் - வீ.ஆனந்தசங்கரியே. அந்த முதன்மை நிலையை உரிய முறையில் பேணி, வாக்களித்து அவருக்குப் பெருமை சேர்த்தார்கள் குடாநாட்டு மக்கள். அந்தப பெருமைக்கு இப்போது 'பரிகாரம்' செய்கின்றார் அவர்.

பல காட்டிக் கொடுப்புகளுக்கு மத்தியிலும் ஆனந்தசங்கரி உட்பட கூட்டமைப்பு வேட்பாளர்களை பெரு வெற்றியீட்டச் செய்வதற்கு களத்தில் நின்றவை பல சக்திகள். யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், வெகு ஜன அமைப்புகள் - மனிதநேய அமைப்புகள் மற்றும் அவற்றின் ஒன்றியங்கள், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இப்படி பலதரப்புகள் தமது உயிரையும் துச்சமென மதித்து தேர்தல் களத்தில் பிரசாரப் பாய்ச்சல் நடத்தின.

"தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகளே என்பதை உலகுக்கு நிரூபிக்க தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்' - என்றுதான் இந்த சக்திகள் பலவும் களத்தில் புயலாய் பிரசாரம் செய்தன. ஆனால், அந்தப் பிரசாரத் தீயில் குளிர்காய்ந்த தலைமை வேட்பாளருக்கோ அப்போது இது கண்ணில் படவில்லை - திட்ட வட்டமாக அதை மறுப்பதற்கு. இப்போதுதான் சீறிப்பாய்கின்றார்.

"ஏறியபின் ஏணி எதற்கு? எட்டி உதை அதை!"- என்ற கதைதான் அரங்கேறுகிறது.

வெறும் வாக்குச் சீட்டு அரசியலில் - ஜனநாயகத்தின் பெயரில் நடக்கும் வெற்றுவேட்டு முழக்க அரசியலில் - இத்தகைய குத்துக்கரணங்களும் சந்தர்ப்பவாதங்களும் சகஜந்தான்; வழமைதான். அதுதான் முன்னைய நான்கு தசாப்தகால அரசியலாகவும் தமிழர்களுக்கு இருந்தது.

ஆனால், இன்று நடப்பது பதவிக்கதிரைக்கு போட்டி போடும் - அதற்காகப் பகடைக்காய் நகர்த்தும் - சூதாட்டம் நடத்தும் - வாய்வீச்சு அரசியல் அல்ல. இது விடுதலைப் போராட்டத்துக்கு உரமூட்டும் ஜனநாயக எழுச்சி. அதிலே காலங்காலமாய் தாங்கள் நடத்திவந்த சாக்கடை அரசியல் போக்கை மீண்டும் கொண்டுவந்து கொட்டுவதற்கு சில அரசியல் தலைவர்கள் (?) எடுக்கும் முயற்சி அநாகரிகமானது; அருவருக்க வைப்பது; கண்டிக்கத்தக்கது.

இத்தகைய போக்குகள் எதிர்காலத்தில் நடக்கும் என்பதை கடந்த பொதுத் தேர்தலுக்கு பத்து நாள்களுக்கு முன்னரே - நேரத்துடனேயே - மூத்த அரசியல்வாதியும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி எச்சரித்திருந்தார். கடந்த 25.11.2001 திகதிய உதயனில் அந்த எச்சரிக்கை அப்படியே பிரசுரமாகியுமிருந்தது.

"கூட்டமைப்பை வளைத்துப் பிடித்து புலிகளை ஓரங்கட்ட முயற்சியா? - அது ஒருபோதும் நடக்காது என்கிறார் விநாயகமூர்த்தி" - என்ற தலைப்பில் அந்த செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"எதிர்வரும் பொதுத் தேர்தலில் தெரிவுசெய்யப்படும் நான்கு கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழர் பிரதிநிதிகளாகக் காட்டி அவர்களுடன் பேச்சு நடத்தவும், புலிகளை ஓரங்கட்டவும் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் முயற்சி செய்வதாகத் தெரிகின்றது. அதற்கு நாம் ஒருபோதும் இடங்கொடுக்க மாட்டோம்" என்று விநாயகமூர்த்தி விவரித்திருந்தார்.

'தமிழினம் புலிகளின் பின்னால் அணி திரண்டுள்ளது என்பதையும் புலிகளே தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தவே நாம் ஒன்று திரண்டுள்ளோம்.

"இங்கு சமாதானத்தைக் கொண்டுவர இந்தியாவோ, அமெரிக்காவோ விரும்பினால் எந்த அரசு பதவியிலிருந்தாலும் அந்த அரசை புலிகளுடன் மாத்திரம் பேச்சுக்களை நடத்துமாறு அவை அழுத்தம் கொடுக்க வேண்டும்" - என்றும் விநாயகமூர்த்தி குறிப்பிட்டிருந்தார்.

விநாயகமூர்த்தியின் அன்றைய எச்சரிக்கைக்கும் அண்மைக்காலத்தில் தமது குடும்ப நிகழ்வுகளைக் காட்டிக் கொண்டு அடிக்கடி, குறிப்பிட்ட சில வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய நமது அரசியல் தலைவர்கள் இப்போது அடிக்கும் குத்துக்கரணங்களுக்கும் உள்ள தொடர்புகளையும் அதை ஒட்டி எழும் ஊகங்களையும் மக்களின் கவனத்துக்கு உட்படுத்துவது நமது கடமையாகுகின்றது.

# பிரதேச செயலர்கள் அலுவலகத்தில் திங்களும் புதனும் இருப்பது அவசியம்!

வலி.மேற்கு,மார்ச்25

வாரத்தில் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் தமது அலுவலகங்களில் இருந்து பொதுமக்களைச் சந்தித்து அவர்களுக்கான பணிகளை நிறைவேற்றவேண்டும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஏ.ஐ.விக்ரம சகல அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமையும் புதன்கிழமையும் பயிற்சிப் பட்டறை மற்றும் வெளிக்கள வேலைகள் ஆகியவற்றில் பங்குபற்ற வேண்டாம் என்றும் -

அலுவலகங்களிலும் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள் ஆகியவற்றை நடத்துவதைக் கூடியளவு தவிர்த்துக்கொள்ளும்படியும் -

சுற்றறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-175)

## திருவீதி மான்மியம்

### நலிவுற்றார் நம் தமிழர்

மாளட்டும் 'ஈராக்' என்று
மா பெரிய போர் தொடுத்து
நாலெட்டில் வெல்வேன் என
நம்புகிறார் ஜோர்ஜ் புஷ்ஷார்
வாளெடுத்து தலைசீவி
வந்தவரை கொல்வேன் என
தோள் தட்டி வீர முழக்கம்
தொடுக்கிறார் சதாம் ஹுசைன்
பாழ்பட்ட வெயிலிலே
பலமணி கியூவில் நின்று
நாள் முற்றாய் நடுத்தெருவில்
நலிவுற்றார் நம் தமிழர்.

- விகடகவி.

### ஜி.ரி.இசற் வீட்டுத்திட்டத்துக்கு

# பயனாளிகள் தெரிவு குறித்த பிரமாணங்கள் வலியுறுத்து

கொக்குவில்,மார்ச்25

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இந்த ஆண்டு செயற்படுத்த உள்ள வீட்டுத்திட்டத்திற்கு பயனாளிகளை தெரிவு செய்வதற்காக சில பிரமாணங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக இத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர். கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்கள், கிராமிய புனர்வாழ்வு நல்லிணக்கக் குழுக்கள் மூலம் இத்தெரிவு நடைபெற்று வருகின்றது. இப்பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் கைக்கொள்ளப்படும் தெரிவுப் பிரமாணங்கள் வருமாறு:-

போரின் காரணமாக சேதமாக்கப்பட்ட வீடுகளின், தமக்குச் சொந்தமான நிலங்களின் அல்லது சொந்தமான நிலங்களாக உதவி அரச அதிபர் மற்றும் அரச அதிபர் ஆகியோரினால் அடையாளப்படுத்தப்படக்கூடிய நிலங்களின் ஆவணங்களை உடையவர்கள்.

வறுமைக்கோட்டின்கீழ் உள்ளவர்கள்.

தமது சொந்த நிலங்களில், தற்காலிக இருப்பிடங்களில் வசிக்கும் குடும்பங்கள்.

எவ்வித உதவித்திட்டங்களின் மூலமும் பயன் பெறாத குடும்பங்கள்.

இளம் பெண்களின் தலைமையில் இயங்கும் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உடைய குடும்பங்கள்.

பெண்களை குடும்பத் தலைவர்களாக உடைய பதினாறு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உடைய குடும்பங்கள்.

பதினாறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை அதிமாக உடைய குடும்பங்கள்.

வலுவிழந்த துணைவர் உள்ள குடும்பங்கள்.

இலவசமான உலர் உணவையும், பொதுசன மாதாந்த உதவிப்பணத்தையும் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள்.

தனிநபர் குடும்பங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். மேற்கண்ட தெரிவுப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகள் தெரிவு பிரதேச செயலகங்களில் நடைபெற்று வருகின்றது.

தெரிவுசெய்யப்படும் பயனாளிகள் பற்றிய விவரம் ஏழு நாள்களுக்கு மக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். தெரிவு சம்பந்தமான முறையீடுகள் இருக்குமாயின் உதவி அரச அதிபர், கிராம சேவையாளர், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் ஆகிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறியப்படுத்தல் வேண்டும். இம்முறைப்பாடுகள் சம்பந்தப்பட்டோரால் பரிசீலிக்கப்பட்டு அம்முறைப்பாடுகளில் உண்மை இருப்பின் தெரிவு செய்யப்பட்ட பட்டியல் மீள் தெரிவுக்கு உட்படுத்தப்படவேண்டும். பின்னர் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு பயனாளிகள் தெரிவு இறுதி செய்யப்படல் வேண்டும் எனவும் அறி[illegible]பட்டுள்ளது.

# சம்பளக் கொடுப்பனவு குறித்து ஆலோசனை

அச்சுவேலி,மார்ச்25

பாடசாலை ஆசிரியர்களின் மாதாந்தச் சம்பளத்தை அவர்களின் சொந்தக் கணக்கில் வைப்பிலிட்டு வங்கி ஊடாக பணக் கொடுப்பனவை செய்வதற்கு பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்வித் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

மாதாந்தம் பாடசாலை அதிபர்களுக்கு காசோலை மூலம் வழங்கப்படும் சம்பளத்தை அதிபர்கள் வங்கியில் பணமாக மாற்றி ஆசிரியர்களுக்கு வழங்கி வந்தனர். இந்த நடைமுறையை மாற்றும் பொருட்டே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (எ-11)

### படகுமூலம் இந்தியா சென்ற

# கணவனைப் பற்றிய தகவல்களை பெற்றுத்தர மனைவி கோரிக்கை!

### மனித உரிமை ஆணைக்குழுவிடம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

கடந்த மூன்றரை வருடங்களுக்கு முன்பு படகுமூலம் இந்தியாவுக்குச் சென்ற தனது கணவன் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மயிலிட்டியைச் சேர்ந்த தாங்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பகுதியில் வசித்து வந்ததாகவும் -

கடந்த 99ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி இந்தியா செல்வதற்காகத் தனது கணவர் [illegible]லிங்கம் தர்மலிங்கம் (வயது 35) வேறு சில[illegible]வில் இருந்து படகுமூலம் புறப்பட்டுச் சென்றதாகவும் - அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்ற எனது கணவர் எங்கு இருக்கிறார் என்பது தொடர்பான எந்தத் தகவலும் எனக்கு இன்று வரையும் கிடைக்கவில்லை. கணவர் புறப்பட்டுச் சென்ற மறுநாள் ஊர்காவற்றுறைக் கடற்பகுதியில் 16பேரின் சடலங்கள் காணப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. ஆனால், அதில் தெரிவிக்கப்பட்டிருந்த பெயர்களில் எனது கணவரின் பெயர் இருக்கவில்லை. இதுவரையில் கணவரிடமிருந்து எவ்வித தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை.

எனவே, அவர் பற்றிய விவரங்களைப் பெற்றுத்தர வேண்டும் - இவ்வாறு அப்பெண்மணி கோரியுள்ளார். (ஒ-10)

# குடாநாட்டில் தங்கியுள்ள குடும்பங்கள் ஒரு லட்சத்து 43 ஆயிரத்துக்கும் மேல்

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 4லட்சத்து 99 ஆயிரத்து 195 பேர் வசித்து வருவதாகச் செயலகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இதில் மிகவும் அதிக அளவிலான அதாவது,18 ஆயிரத்து 241 குடும்பங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 566 பேர் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலும் மிகவும் குறைந்த அளவிலான அதாவது, 525 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 905 பேர் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலும் வசித்து வருகின்றனர்.

பிரதேச செயலர் ரீதியாக வாழ்ந்துவரும் குடும்பங்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் வருமாறு:-

- நெடுந்தீவு - ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 266 பேர்.
- வேலணை - 4 ஆயிரத்து 211 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 411 பேர்.
- ஊர்காவற்றுறை - 7 ஆயிரத்து 279 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 20 பேர்.
- யாழ்ப்பாணம் - 12 ஆயிரத்து 74 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 107 பேர்.
- நல்லூர் - 14 ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 576 பேர்.
- சண்டிலிப்பாய் - 14 ஆயிரத்து 379 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 428 பேர்.
- சங்கானை - 10 ஆயிரத்து 951 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 01 பேர்.
- உடுவில் - 12 ஆயிரத்து 190 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 611 பேர்.
- தெல்லிப்பழை - 4 ஆயிரத்து 786 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 632 பேர்.
- கோப்பாய் - 17 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 59 ஆயிரத்து 161 பேர்.
- சாவகச்சேரி - 18 ஆயிரத்து 241 குடும்பங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 566 பேர்.
- கரவெட்டி - 13 ஆயிரத்து 290 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 345 பேர்.
- பருத்தித்துறை - 11 ஆயிரத்து 303 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 196 பேர்.
- மருதங்கேணி - 525 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 905 பேர்.

(ஒ-10)

## நாளை

பங்குனி 12
புதன்கிழமை
(26.03.2003)
திதி : நவமி
முற்பகல் 10.48 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பிற்பகல் 5.14 வரை
சுபநேரம் : 4.45 - 6.15
ராகுகாலம்: 12.15 - 1.45
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

இரக்கம் என்பது அடிமைப்பாவது அல்ல.

## வனிலா சுவையூட்டப்பட்டது

# Action

## Nutritional Food Drink

## போஷாக்கு நிறைந்த பானம்

**பிள்ளைகள்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, விட்டமின் B,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**வாலிபர்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, சின்க்,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**வயது வந்தவர்கள்**
புரதம், கல்சியம், இரும்புச்சத்து,
சின்க், அன்டி ஒக்ஸிடன்
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**கர்ப்பிணி / பாலூட்டும்
தாய்மார்கள்**
சக்தி, புரதம், கல்சியம்,
(ƒ)போலிக் அமிலம், விட்டமின் $B_{12}$,
இரும்புச்சத்து, மற்றும் ஏனைய
அத்தியாவசிய போஷனைகள்.



**போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.**

27 அத்தியாவசிய
போஷணைப்பதார்த்தங்கள்


தகுந்த சின்க் இரும்புச்சத்து
விகிதம்.

தகுந்த கல்சியம்
பொஸ்பரசு விகிதம்

**வயோதிபர்**
புரதம், விட்டமின் B,
அன்டி ஒக்ஸிடன் மற்றும்
ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**450 கிராம்
ரூ. 380/=**




Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 636741 Fax: 636173
E-mail: astron@astron.lk

# போராா்வலா்களைத் திருப்திப்படுத்தவே புலிகளின் கப்பல்கள் தாக்கப்படுகின்றன!

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இந்த விடயம் குறித்து சுனந்ததேசப்பிரிய எழுதி "ராவய" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

காது செவிடாகும் அளவிற்கு ஜே.வி.பி.யினரின் கைதட்டல்கள் மத்தியில் மங்கள சமரவீர பின்வருமாறு கூறினார். "விடுதலைப் புலிகளின் அந்த யுத்தக் கப்பலைத் தாக்கி அழிக்குமாறு கடற்படையினருக்கு எமது ஜனாதிபதியே உத்தரவுகளை வழங்கினார்."

மங்கள சமரவீரவின் தகவல்களின் படி அரசின் பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பாதுகாப்புச் செயலரோ கப்பலைத் தாக்கி அழிப்பதற்கான உத்தரவுகளை வழங்கவில்லை. அவர்கள் கண்காணிப்புடன் இருக்குமாறே கடற்படையினருக்கு உத்தரவுகளை வழங்கியுள்ளனர்.

யுத்தநிறுத்தம் நடைமுறையிலுள்ள வேளையில் குறிப்பாக, இனங்காண முடியாத கப்பல் ஒன்றின மீது சர்வதேச கடற்பரப்பில் தாக்குதலை மேற்கொண்டு அந்தக் கப்பலை அழிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்று நடவடிக்கைகள் கடற்படையினரிடம் இருக்கவில்லையா? தமது கட்டளைக்குப் பணி



யாத காரணத்தினால் அந்தக் கப்பல் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பது கடற்படையினரின் நிலைப்பாடாகும்.

அந்தக் கப்பல் தங்களுக்குச் சொந்தமானது என்பதை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனாலும் அந்தக் கப்பல் ஆயுதக் கப்பல் அல்ல; அது வர்த்தகக் கப்பலே என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இதில் எது உண்மை, எது பொய் என்பதை அறிய முடியாத நிலையுள்ளது. ஏனெனில், கப்பல் ஆழ் கடலில் மூழ்கிவிட்டது. இந்தத தாக்குதல் சிறிலங்காவின் கடல் எல்லைக்குள் இடம்பெற்றுள்ளது என முதலில் கடற்படையினர் தெரிவித்தனர். ஆனால், இந்தத் தாக்குதல் சர்வதேசக் கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது என விடுதலைப் புலிகள் தெரிவித்த தகவல் தற்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறெனில் கடற்படையினர் கூறியது பொய் அல்லவா?

கடற்பரப்பில் யுத்த நிறுத்தம் இல்லை எனில் வேறுவிதமாகக் கூறுவதாயின் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கி மூழ்கடிப்பதற்கு கடற்படையினருக்கு உரிமை உள்ளது எனில் விடுதலைப் புலிகளுக்கும் அவ்வாறான உரிமை உள்ளதா? கடற்பரப்பில் விடுதலைப புலிகளின் ஆற்றல் அதிகரித்திருந்தது. விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவு இன்னும் கலைக்கப்படவில்லை. எனவே கடற்புலிகளால் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்படுமேயானால் என்ன நடக்கும்?

விடுதலைப் புலிகள் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து குறிப்பாக சிங்கள மக்களுக்கும் பொதுவாக சர்வதேச சமூகத்திற்கும் ஒரு தகவலை வெளியிட்டுள்ளனர். அதாவது, அந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் காரணமாக தாங்கள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதில்லை எனவும், சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வினைக் காண்பதே தமது அபிலாஷை எனவும் தெரிவித்துள்ளனர். ஏதாவது ஒரு காரணத்தால் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்படுமேயானால் இவ்வாறான நிலைப்பாட்டை (விடுதலைப் புலிகளைப் போல்) அரசினால் மேற்கொள்ள முடியுமா? அவ்வாறான ஒரு நிலைமை உருவாகுமேயாயின அனுரா-ஜே.வி.பி.-மங்கள அணியினர் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி 10லட்சம் மக்களை கொழும்பிற்கு அழைத்துவந்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தாமல் விடுவார்களா?

விடுதலைப் புலிகளுக்குப் பாடம் புகட்டுவதற்காக நாம் யுத்தத்திற்குத் தயாராகவேண்டும் என ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அவ்வாறு யுத்தம் மீண்டும் ஆரம்பித்தால் ஜே.வி.பி. உறுப்பினர்களை லட்சக் கணக்கில் படைகளில் சேர்ப்பதற்கு ஜே.வி.பியின் தலைமைத்துவம் முன்வரக்கூடும். அவ்வாறு லட்சக் கணக்கில் ஜே.வி.பி. உறுப்பினர்களைப் படைகளில் சேர்ப்பதற்கு ஜனாதிபதி தயாராயுள்ளாரா?

இது 1971இல் இருந்து ஆயுதப் படைகளில் தமது உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ஜே.வி.பி. கையாளும் ஒழுங்கமைந்த தந்திரமாகும். 1988-90 காலகட்டங்களில் ராணுவத்தில் ஜே.வி.பியினர் ஊடுருவி இருந்தனர். ஜே.வி.பியினால் அந்தக் காலகட்டத்தில் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்டவன் செயல்களுக்கு ஆயுதங்களை வழங்கியவர்கள் ராணுவத்தில் ஊடுருவியிருந்த ஜே.வி.பி.உறுப்பினர்களே ஆவர்.

விடுதலைப் புலிகளின் கப்பல் மீது தாக்குதலை மேற்கொண்டு அக் கப்பலை அழிக்காது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அழைத்து அந்தக் கப்பல் தொடர்பாக நட



வடிக்கைகளை மேற்கொண்டிருப்பின அது நல்ல நடவடிக்கையாக அமைந்திருக்காதா? நெடுந்தீவில் தங்கள் கப்பலை அழித்துத் தற்கொலை செய்துகொண்ட மூன்று விடுதலைப் புலிகள் தொடர்பாக ஜனாதிபதி பகிரங்கமாகவே அவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அந்த மூன்று உயிர்களையும் தன்னால் காப்பாற்ற முடியாமல் போனதையிட்டு ஜனாதிபதி மனம் வருந்தினார்.


யுத்த நிறுத்த உடன்பாட்டுடன் சமாதானப் பேச்சுகள் மேற்கொள்ளப்படும் வேளையில் ஏட்டிக்குப் போட்டியான நடைமுறைகளை அனுசரிக்கக் கூடாது. தேவையான சந்தர்ப்பங்களில பின்னடைவுகள் ஏற்படினும் சமாதான நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் நடைமுறைகளையே அனுசரிக்க வேண்டும். ஆனால், அவ்வாறான கவனமான நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் யுத்த வெறி கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வந்து கொண்டிருக்கின்றனர்; முன்வருவர். அவ்வாறான யுத்த வெறிகொண்ட ஆர்ப்பாட்டங்காரர்களின் அழுத்தங்களுக்குத் தென்பகுதியிலுள்ள அரசு மாத்திரமன்றி அரசபடைகளும் அசைந்து கொடுக்கின்றன என்பது ரகசியமன்று. அதி உயா பாதுகாப்பு வலயம் தொடர்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா முன்வைத்த அறிக்கை அதைத் தெளிவுபட எடுத்துக்காட்டுகிறது.

யுத்த நிறுத்த உடன்பாடும் சமாதான முயற்சிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தென்பகுதியில் அமைதி விரும்பும் பெரும்பான்மை பொதுமக்கள் நம்பிக்கை கொண்டிருந்தாலும் அந்த மக்களின் கருத்தை எடுத்துக்கூற எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேறு சிவில் அமைப்புகளோ முன்வரவில்லை. கட்டுநாயக்கா விமானத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் மக்களின் பெரும் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட சிறிலங்கா பெஸ்ட் (SRI LANKA FIRST) என்ற அமைப்பு தற்போது செயலிழந்துள்ளது.

இந்நாட்டின் பிரஜைகளில் சமாதானத்தை விரும்பும் பெரும்பான்மையினருக்கு ஓர் அரசியல் அமைப்பு இருப்பின் கடற்படையினரும் அரசும் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இதை விட மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கும். யுத்த நிறுத்தம் மீறப்படுவதும் அதனால் உருவாகும் மோதல்களும் தாக்குதல்களும் வெறுமனே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போக்குவரத்திற்கு எதிரானதாக அமையவில்லை. பதிலாக தென் பகுதியில் போர் ஆர்வங்கொண்டவர்களைத் திருப்திப்படுத்தும் செயலாகவும் அமைந்துள்ளன. எனவே, இத்தகைய பின்னணிகளில் சமாதான முயற்சிகளில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்படின் அதற்கான பொறுப்பை இந்நாட்டுப் பொதுமக்களும் ஏற்றாக வேண்டும்.

ஜே.வி.பியினரின் கரகோஷங்களுக்கு மத்தியில் தென்பகுதியிலுள்ள மேடைகளில் இருந்தவாறு வடக்கை நோக்கித் தாக்குதலை மேற்கொள்ளும் மங்கள சமரவீர மாத்திரமன்றி இரு கைகளும் ரத்தச் சிவப்பாகும் வரை யுத்த கோஷத்திற்கு ஏற்ப கரகோஷமிடும் அரசு - ஜே.வி.பி. - மங்கள கூட்டணியின் அனுதாபிகள் மாத்திரமன்றி - பேசா மடந்தைகளாகத் தென்பகுதியில் அமைதி பேணும் பொது அமைப்புகளும் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் கொழும்பில் இருந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் எவரும் போர்க்களம் சென்று போராடத் தயாராயில்லை என்பதை நாமனைவரும் அறிவோம். தென்பகுதி மக்கள் சமூகம் யுத்தத்திற்குச் செல்லாது. சுமார் 2 லட்சம் பேரைக் கொண்ட படைகளில் இருந்து சுமார் 50ஆயிரம் படையினர் தப்பி ஓடியது இதற்கு நல்லதோர் உதாரணமாகும். படைகளில் சேர்வதற்கான விருப்பமும் அவ்வாறே அமைந்துள்ளது. யுத்தத்திற்கான வரியைச் செலுத்துவதையும் மக்கள் அருவருக்கின்றனர். போரார்வங்கொண்டவர்கள் பலம் பெறுவதற்



கான வாய்ப்புகளும் உள்ளன. நாங்கள் விரும்பாத திசையை நோக்கியே மீண்டும் பயணம் செய்கின்றோம். ஆனால், அந்த திசையை சரியாக அமைப்பது சமூகத்தின் பொறுப்பல்லவா?

சமாதான முயற்சிகளைப் பாதுகாப்பது எமக்குத் தேவைதானா? அல்லது பிறப்பவர்கள் எப்படியாவது வாழட்டும் என நா[illegible] யின்றி இருக்க[illegible]

யுத்த நிறுத்தம் [illegible] யடைந்ததைபொட்டு ஏற்பட்ட கொடிகளும் ஏற்றப்பட்ட தீபங்களும் பாடப்பட்ட கீதங்களும் உச்ச[illegible] நிலைபெறவேண்டிய வேளை இ[illegible]கும். மீண்டும் யுத்தம் வேண்டாம் எனக் கோஷம் எழுப்பக்கூடிய தைரியம் பெண்களுக்கு, ஆண்களுக்கு [illegible]றும் சிறுவர்களுக்கு உருவாகவேண்டியது இவ்வாறான தீர்க்கமான வேளையிலாகும்.

இருப்பினும், எமது சமாதான விரும்பிகளுக்கு அவ்வாறான குறிக்கோள் இல்லை. காரணம் அவர்கள்

**தமிழில்:கஜனி**

பல பிரிவுகளாக, பல்வேறு திசைகளில் செயற்படுகின்றனர். அதில் தவறு இல்லை. அதற்குத் தடையுமில்லை. ஆனால், சமாதானத்தில் விருப்பம் கொண்டவர்களாகக் காட்டிக்கொள்ளும் சமாதான விரும்பிகள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அவர்கள் தயாராய் இருக்கவேண்டும்.

இவ்வாறான தீர்க்கமான வேளையில் போர் ஆர்வங்கொண்டவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் கேட்கும் வகையில் "மீண்டும் யுத்தம் வேண்டாம் எனக் குரல் எழுப்பவேண்டும்; எழுத வேண்டும். அடம்பன் கொடிபோல் ஒன்றாகத் திரள முடியாவிடின் சமாதானத்தை நாம் எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? [illegible]

## நம்மைத் தாழ்த்துவோம்!

"நான் ஆண்டவனின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" மங்கள வார்த்தையின்போது மரியாளை முதலில் அச்சம் ஆட்கொண்டது. தந்தையின் திட்டம் என்னவென்று புரிந்துகொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. அச்சத்தை நீக்கிப் புரிந்து

**தவக்காலச்சிந்தனை**
**-இருபத்தோராம் நாள்-**

கொள்ளும் மனநிலையை பரிசுத்த ஆவி அவருக்குக் கொடுத்தார். அப்போது அவருக்கு மகிழ்ச்சியும், அமைதியும் ஏற்பட்டது. அதனால், அவர் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. மரியாள் தம் சிறுமையை உணர்ந்தார். இறைவன் எவ்வளவு பெரியவர் என்றால், நான் அவ்வளவு சிறியவள் என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டார். இறைவனின் விருப்பம் என்னில் நிறைவேறட்டும் என்று இறை சித்தத்திற்கு தன்னை கையளித்தாள். இதனாலேயே கடவுளின் வல்லமை அவரில் நிழலிட்டது. தீமையின் எல்லாவித கதிர்வீச்சிலிருந்தும் அவர் பாதுகாக்கப்பட்டார். இந்த நிழலிலேயே இறைவனின் திருவுளத்தை எப்போதும் அவர் நிறைவேற்றினார். இதனாலேயே வானதூதர் அவரை வாழ்த்தினார். அருளை நிறைவப் பெற்றார். ஆண்டவனின் பிரசன்னத்தில் வாழும் ஓர் உயர்ந்த நிலை அவருக்கு ஏற்பட்டது. எதுவும் என் வாழ்வில் நடக்கட்டும் என்ற நம்பிக்கையில் சரியாது வாழும் துணிவு. இதுவே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை. இந்த மரியாள் தன்வாழ்வில் வெளிப்படை ஆக்கியதாலேயே நம் அனைவருக்கும் தாயாகவும், மாதிரியாகவும் விளங்குகிறார்.

நாம் ஒவ்வொருவரும் எல்லாவற்றிலும் கடவுளின் திருவுளத்தை

**யோ.கீர்தபொன்கலம்**

நாடி வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இறை வல்லமையின் நிழலில் நாம் குடியிருந்தோமாயின் நம் வாழ்விலும் கடவுளால் முடியாதது எதுவுமில்லை என்பதை நம்புவோம். மனிதநேயம் மறைந்துவரும் இன்றைய காலகட்டத்தில் எங்கும் எதிலும் வியாபாரம் என்ற தாரக மந்திரத்தால் இயக்கப்படும் இன்றைய சமுதாயத்தில் நல்லவை மறுக்கப்படுவது மட்டுமல்லாமல் மறக்கப்பட்டும் வருகின்றன. மனமாற்றத்தின் காலமாகிய இன்றைய நாள்களில் ஒவ்வொருவரும் வாழ்கின்ற சூழலில் நற்செய்தியை அடுத்தவருக்கு சாதாரண எளிய முறையில் எடுத்துரைக்கமுடியும். வாழ்வோடு கூடிய இறை வார்த்தையை எடுத்துரைக்கும் இத்தகைய போதனைதான் அதிகம் சாத்தியமானதும் சக்தி வாய்ந்ததுமாகும். ☆

## குருநகரை விஸ்தரிக்க கோரிக்கை!

குருநகரில் பெருகிவரும் மக்களது வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் குருநகரின் குடியிருப்பு எல்லையை மேற்குப் பக்கமாக முன் வீதி, பிரதான வீதிவரை விஸ்தரிக்கும் அங்கீகாரத்தை வழங்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்புக் கோரியுள்ளது.

குருநகர் மக்களின் உடனடி அவசர வைத்திய சேவையை வழங்கி வரும் குருநகர் அரசினர் வைத்திய சாலையை நவீனமயப்படுத்துவதன் மூலம் குருநகர் மக்களுக்கான மருத்துவ சேவையினை பூரணமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (ஓ-51)

## காங்கிரஸ் தீர்மானம்

யாழ்மாநகரசபை கட்டடம், சுப்பிரமணியம் பூங்கா ஆகியவை அமைந்திருந்த பகுதியில் முகாம் அமைக்கும் படையினரின் திட்டத்தை எதிர்த்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்சபைத் தீர்மானம் நிறைவேற்றியது.

இக்கட்சியின் பொதுச் சபைக்கூட்டம் யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் 10மணிக்கு கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ-51)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தின் கண்காட்சியை யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வி.வீரபத்திரபிள்ளை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில், கரவெட்டி பிரதேச செயலர் கே.கனகரத்தினம், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சிவசுவாமி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (எ-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கில வகுப்பு

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன ஆங்கிலம் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கலாம் தொடர்பு: இ.தேவதாஸ், இல.560, கே.கே.எஸ். வீதி (அரசடி பிள்ளையார் கோயில் முன்பாக), யாழ்ப்பாணம். (15752)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த கு.இராஜராஜேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.565623672V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில ஒப்படைத்து உதவவும். (15921)

இல.07, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு ஜெகராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.530730069V), விசேட அடையாள அட்டை (0902030730) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (15926)

கோண்டாவில் வடக்கு, சென். செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த குணேசலிங்கம் பிரதீஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.820872576V), விசேட அடையாள அட்டை (இல.0902028552), பாடசாலை அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (15927)

143/1, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.திரேசம்மா என்பவருடைய 2 1/4 பவுண் சங்கிலி 23-03-2003 காலை 5.30 மணியளவில் இராசாவின்தோட்டம் அருள்மாதா கோவில் வாகைமரத்தடிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (15928)

## திருமண சேவை

1979, பரணி, செவ்வாய் 4, படித்த, அழகிய, சுவிஸில் உள்ள மணப்பெண்ணுக்கு ஐரோப்பிய நாடுகளில் வதிவுரிமை பெற்ற மணமகன் தேவை. மணமக்களின் தேர்வுக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (15930)

## NEW BOOK

'Survival and simple things' by award winning writer Ayathurai Santhan. Available at Abirami Communications, opposite Campus. Thirunelvely. Price 100/- (15909)

## கந்தரநுபூதி போட்டிகள்

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனையையொட்டி வருடாவருடம் நடத்தப்படும் கந்தரநுபூதி மனனப் போட்டி இம்முறையும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலட்சார்ச்சனை அடுத்தமாதம் 2ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகும்.

கந்தரநுபூதி மனனம்செய்தல், கந்தரநுபூதி கட்டுரை எழுதல், கந்தரநுபூதி பாராயணம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.(ஒ-28)

## ஜி.சீ.ஈ பரீட்சைகளின் பெறுபேறுகள் மதிப்பிடப்படும்

ஜி.சீ.ஈ.சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளை இனிவரும் காலங்களில் மதிப்பீடு செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் பரீட்சைப் பெறுபேறுகளின் தரம் மிகவும் வீழ்ச்சியடைந்து வருவதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாகாண அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற பாடசாலைகளிலேயே இந்த வீழ்ச்சி அதிகமாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள 9 ஆயிரத்து 876 பாடசாலைகளில் 326 பாடசாலைகள் மாத்திரமே மத்திய அரசின் கீழ் உள்ளன. ஏனைய பாடசாலைகள் யாவும் மாகாண அமைச்சுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியானவுடன் அவை மதிப்பீடு செய்யப்பட்டு அந்த விவரங்கள் யாவும் மே மாத இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-10)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



## சிவகுமாரன் சிவானுஜா

இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
சிவகுமாரன் - மலர்விழி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

### சிவானுஜா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா மற்றும் கனடாவில் வசிக்கும் சித்தப்பா மற்றும் மாமா, அத்தைமார், அண்ணாமார் அனைவரும் இவரை நல்லைக்கந்தன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்,
*77, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**திரு.சி.சிவகுமாரன்** (அப்பா).
**T.P.: 021 - 222- 3212**

(15932)

---

## யா/வட்டு. இந்துக்கல்லூரி - சித்தன்கேணி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்: 30-03-2003 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
இடம்: கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு.ச.இராமலிங்கம் (அதிபர்)

மேற்படி பொதுக்கூட்டத்திற்கு பெற்றோர்கள் (அங்கத்தவர்கள்), நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது வருகை தந்து பூரணமான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ச.இராமலிங்கம்
தலைவர்

பொ.ரவிச்சந்திரன்
பொருளாளர்

ந.ஆனந்தராசா
செயலாளர்

(15917)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் நடத்தும்

### விவசாயக் கருத்தரங்கு

### விவசாய அபிவிருத்தியும் இனவிருத்தியும்

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
காலம்: நாளை (26.03.2003) புதன்கிழமை
காலை 10.00 மணி

தலைவர்: திரு.த.குகதாசன்
*(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்)*

பிரதம விருந்தினர்:
அதி வண. பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன்

கருத்துரை வழங்குவோர்:
**"பயிர் அபிவிருத்தியும் இனவிருத்தியும்"**
பேராசிரியர் V.அருள்நந்தி
(பயிர் பிறப்பாக்குநர்)
**"கால்நடை அபிவிருத்தியும் இனவிருத்தியும்"**
வைத்திய கலாநிதி இ.ஞானசேகரம்
*(செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி)*

இக்கருத்தரங்கில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.

(15922)

---

## யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### இலிகிதர் பதவியில் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு

எமது சங்கத்தில் மேற்சொல்லப்பட்ட பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை ரூபா 10 செலுத்திப் பெற்று விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் யாவும் *பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ 09.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

1. பதவி :- இலிகிதர் பதவியில் பயிலுநர்
2. சம்பளம் :- கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 100 பயிலுநர் படியாக வழங்கப்படும்.
3. கல்வித்தகைமைகள் :-
   கூட்டுறவு ஊழியர் 16 ஆம் சம்பளத் திட்டத்திலான பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
   அல்லது
   க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் கணிதம்/ எண் கணிதம் /வர்த்தக எண்கணிதம்/ சிங்களம/ தமிழ் பாஷை உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4. நிபந்தனை:
   1. விண்ணப்பதாரிகள் 09.04.2003 இல் 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
   2. யாழ். மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
   3. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(C-37087)

---

## கண்ணீர்ப் பூக்கள் காணிக்கையாகின்றன

வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச சபை நெல்லியடி
உப அலுவலக பொறுப்பதிகாரி
திரு.மா.கந்தசாமி அவர்களின் அன்பு மகன்

### செல்வன் சுஜிந்தன்

அவர்களின் அகால மரணச் செய்தியால் வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச சபையைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களும் உளம் நெகிழ்ந்து உருகி எழும் தம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றனர். மகனின் இழப்பால் துயருறும் திரு.மா.கந்தசாமி குடும்பத்தினருடன் தாமும் இணைந்து துயருறுகின்றனர்.

*துயரில் பங்குறும்:*
**செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.**

(சி-37086)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 - 07 - 1948



ஆண்டவன் அடியில்
09 - 04 - 1999

அமரர்

### பசுபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஆசிரியர் - லொஜிக் சுப்பர்)

திதி: 25-03-2003

*ஆசிரியப் பெருந்தகையாய்*
*அளவையியல் கற்பித்தாய்*
*சீரிய நல் மாணவரை உருவாக்கி*
*உயர வைத்தாய்*

*அன்பான தலைவனாய் எம்*
*குடும்பத்தை வாழவைத்தாய்*
*எந்நாளும் எமையுந்தன்*
*பாசத்தில் நனைய வைத்தாய்*

*நான்காண்டு சென்றாலும்*
*நாள்கள் தான் சென்றாலும்*
*உன் பொன்னான நினைவுகளே*
*என்றும் எமை வாழ வைக்கும்.*

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(C-37087)

மனைவி, மகன்,
சகோதரி, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

# குடாநாட்டுப் பொருளாதார வளத்தில் அதிக பங்காற்றும் மிளகாய்ச் செய்கை

இலங்கை மக்கள் தமது அன்றாட உணவில் காரம் சேர்த்துக்கொள்வதை பழக்கமாகக் கொண்டுள்ளனர். அதிலும் குறிப்பாக யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த மக்கள் உணவில் கணிசமான அளவு காரத்தைச் சேர்த்துக் கொள்வதை அவதானிக்க முடியும்.

இக்காரத் தன்மைத் தேவையைப பூர்த்தி செய்ய உதவுவது மிளகாய் ஆகும். இது செத்தல் மற்றும் பச்சை மிளகாய் என இருவகைப்படும். இது "கப் சிக்கம் அனம்" என்ற தாவர வகையைச் சேர்ந்ததாகும்.

செத்தல் மிளகாயை வேறு சரக்கு வகைகளுடன் சேர்த்து அரைத்தெடுப்பதன் மூலம் 'மிளகாய்த் தூள் பெறப்படுகிறது. கறிவகைகள் இம் மிளகாய்த் தூள் சேர்த்துத் தயாரிக்கப்படுவதன் மூலம் ருசியும், மணமும் பெறுகின்றனவே அல்லாமல், இம்மிளகாயின் காரத்தன்மை உடலுக்கு ஒட்டுமொத்தமான கேட்டையே விளைவிக்கின்றது. தென்கிழக்காசிய நாடுகளான இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தே நம் நாட்டுக்கு மிளகாய்ப் பாவனை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம். நம் நாட்டில் மிளகாய் உற்பத்தி எமது பாவனைக்கு போதாமையால் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து வருடாவருடம் மேற்கொள்ளப்படும் மிளகாய் இறக்குமதிக்காக பெருந்தொகை அந்நியச் செலாவணியை நாம் செலவு செய்ய நேரிடுகிறது.

வ்போசாக்குச் சத்தையும் அழிக்காத இம்மிளகாயின் பாவனைத் தேவை கருதியும் நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதாலும் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் இம்மிளகாய்ச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். பச்சை மிளகாயில் ஓரளவு உயிர்ச்சத்து 'சீ' இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

தற்கால அரசியல் சூழ்நிலையை அடுத்து நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு புதிய, பலன் தரும் இன விதைகளை நாட்டி போதிய, பொருத்தமான வளமாக்கிகளை இட்டு நோய்த் தாக்கம் ஏற்படாத வகையில் கிருமிநாசினிப் பிரயோகம் செய்து வருவதன் மூலம் விவசாயிகள் நல்ல பலனைப் பெற இயலும். இப்பயிர்ச்செய்கை தொடர்பாக விவசாயத் திணைக்களம் புதிய புதிய ஆராய்ச்சி முயற்சிகளை மேற்கொண்டு, அவற்றை விவசாயிகள் மத்தியில் அறிமுகம் செய்துவருவதுடன் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய போதனாசிரியர்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள், அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது.

இந்த மிளகாய்ப் பயிர்ச்செய்கை யாழ்குடாநாட்டில் முற்றுமுழுதாக நீர்பாசன செய்கை முறை மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயிகளிடையே இப்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக முன்னர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டமும் கைக்கொள்ளப்பட்டது. மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் நீர்ப்பாசனச் செய்கைமுறை தவிர்ந்த வான் பயிர்ச்செய்கை முறையும் வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. வரண்ட மாவட்டங்களான அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மொனறாகல மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் அண்மைக் காலமாக மகாவலி திசை திரும்பும் திட்டத்தின் மூலம் புதிய பிரதேசங்களிலும் இப் பயிர்ச்செய்கை இடம் பெறுகின்றது.

### மிளகாய் இனம்

அமோக விளைச்சல், நோய் எதிர்ப்பு சக்தி, பசளை தூண்டல் தன்மை, மெல்லிய தோல் மற்றும் அதிக காரம் ஆகியவைகொண்ட மகா இலுப்பலம கலப்பு இனமே 'சிறந்த இனம்' எனத் தெரிவிக்கப்படுகிறது. "மாதகல் கறுபன்" மற்றும் "மயிலிட்டித் தெரிவு" என்பவை தடித்த தோல்கொண்ட யாழ். மாவட்ட இனங்கள் ஆகும்.

ஓர் ஏக்கருக்கு நடுகை செய்ய வேண்டிய மிளகாய் நாற்றை ஒரு கிலோ மிளகாய் விதையிலிருந்து பெற இயலும். 3 அல்லது 4 கிலோ காய்ந்த செத்தலிலிருந்து ஒரு கிலோ மிளகாய் விதையைப் பெற்றுக்கொள்ள இயலும்.

### விதைத்தொற்று நீக்கம்

விதைகளை நடுமுன் தொற்று நீக்கம் செய்தல் அவசியம்.

☆ ஒரு கிலோ மிளகாய் விதைகளை மூடிகொண்ட போத்தல் ஒன்றில் இட்டு, அவற்றுடன் ஓர் அவுன்ஸ உலர்ந்த செரான் அல்லது றிலெக்ஸ் அல்லது அக்கிரோசான் தூள் சேர்த்து பல தடவைகள் குலுக்குவதன் மூலம் தொற்றுநீக்கலாம்.

☆ ஓர் அவுன்ஸ் நாசினியை ஐந்து கலன் நீரில் கரைத்து விதைகளை அக்கரைசலில் அரை மணிநேரம் ஊற விட்டபின் உடனடியாக விதைக்கலாம்.

### நாற்று மேடை அமைத்தல்

✪ சூரிய வெளிச்சம் படக்கூடிய இடம் அவசியம்.

✪ நீர்த் தேக்கமற்ற மணல் பற்றுள்ள இருவாட்டித் தரை உகந்தது.

✪ மாட்டு எரு அல்லது கூட்டு எருவை உபயோகித்து, மேடை தயாரிக்கலாம்.




✪ மேடைகளுக்கு இடையே இடைவெளி இருத்தல் அவசியம்.

✪ நாற்று மேடை நான்கு அங்குல உயரமிருத்தல் அவசியம்.


✪ விதைகளை விதைக்கும் முன்பு அவை தொற்று நீக்கப்படுதல் அவசியமானது. குப்பைகளைப் போட்டுக் கொளுத்துவதன் மூலமோ கிருமிநாசினியைத் தெளித்தல் மூலமோ தொற்று நீக்கலாம்.

✪ நிலக்கறையான், எறும்பு - குறவணையன் புழு தாக்காது அல்றின தூள் மேடையில் தூவி மண்ணுடன் கலந்துவிடுதல்.

✪ பூவாளியால் நாள்தோறும் நீர் தெளித்து வருதல்.

✪ கூடிய நீர்ப் பிரயோகமின்றி மண்ணை ஈரப்பசுமையாக வைத்திருத்தல்.

✪ விதை விதைத்து ஒரு வாரத்தின் பின் பாத்திகளை மூடியிருக்கும் கிடுகு மற்றும் ஓலை ஆகியவற்றை அகற்றிவிடல்.



✪ ஒரு வாரத்தில் முளைகள் தோன்றினும், அதற்கு மூன்று நாள்களின் பின்னர் மேற்கட்டுப் பசளையாக அமோனியம் சல்பேட் திரவ நிலையில் பூவாளியால் தெளித்தல்.

✪ நாற்று மேடையில் தோன்றும் களைகளை அகற்றுவதுடன் இலைச் சுருள் நோய் வராது தடுக்க பெனிற்றோத்தபோன் குழம்பையும் கெந்தகத் தூளையும் நீரில் கலந்து தெளித்தல்.

இவ்வித ஒழுங்கான கவனிப்புடன் பராமரிக்கப்படும் மேடையில் விதைக்கப்பட்ட ஒரு கிலோ மிளகாய் விதையிலிருந்து 20 ஆயிரம் திடமான மிளகாய்க் கன்றுகளை ஒருமாத காலத்தின் பின் பெற்றுக்கொள்ளலாம்.

### நடுகை

யாழ்குடாநாட்டில் நீர்ப்பாசன முறையின் கீழ் சாகுபடி செய்யப்படுவதால் மார்கழி மாத முடிவில் நடுகை செய்தல் நல்ல பலனளிக்கும். நிலையம் ஒன்றுக்கு இரண்டு கன்றுகள் வீதம் 1½ முதல் 3 அடிக்கு ஒன்றாக நிலையம் அமைத்து நடுதல் வேண்டும்.

### நிலத்தைப் பண்படுத்தல்

✪ தரை ஆழமாக உழப்பட்டு, தழை, பனையோலை புதைத்து பின்னர் இயற்கை எரு இடப்படல் வேண்டும்.

✪ யாழ்.குடாநாட்டு விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு பத்துத் தொன் உக்கிய கூட்டெரு அல்லது மாட்டெரு இடுதல் வழக்கம்.

✪ குறவணையன் புழு, கறையான் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க எரு இடும் வேளையில் ஏக்கருக்கு 10 கிலோ அல்றின் **(Aldrin)** தூள் பரவிச் சாறுதல் வேண்டும்.

✪ சணல் விதைத்து பூக்கும் காலத்தில் அதனை வெட்டிப் பசுந்தாள் பசளையாகப் புதைப்பது சிறப்பானது.

✪ வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படும் எருவுடன் புதிய களை விதைகளும் பரவுவதால் பசுந்தாள் பசளையைத் தாமே உற்பத்தி செய்து உள்ளூர் ஆட்டெரு, மாட்டெரு மற்றும் கோழிப்பண்ணை எரு என்பனவற்றுடன் சேர்த்துப் பாவித்தல் சிறப்பானது.

✪ விரும்பினால் வெங்காயம், கௌபீ, பயற்றை மற்றும் அவரை ஆகியவற்றை கரையோரத்திலும், வாய்க்கால் விளிம்பிலும், மற்றும் மிளகாய்ச் செடிகளின் இடையேயும் நாட்டி, பிரதான பயிரான மிளகாய்ச் செடி வளர்ந்து பயன்தரத் தொடங்கு முன்னர் இவற்றின் பயனைப் பெற இயலும்.

### பயிர்ப் பராமரிப்பு

✪ இலைச் சுருள் நோய் வராதிருக்கவும், களைகள் தோன்றாதிருக்கவும், நாசினி வகைகளை உபயோகிக்கலாம். பெனித்றோதயோன் **(Fenetrothione)** மற்றும் கெந்தகம் **(Dispersible Sulphur)** ஆகியவை இவற்றில் சில நாசினி வகைகளாகும்.

✪ இலைகளைத தாக்கும் பனிப் பூச்சி **(Thrips)**, வெண் ஈ **(White Fly)**, அழுக்கணவன் **(Aphids)**, உண்ணி **(Kites)** ஆகிய பூச்சி வகைகளில் பனிப்பூச்சி தவிர்ந்த மற்றைய இனங்கள் இலைகளின் கீழ்ப் பாகத்திலேயே காணப்படும். இதற்காக பூச்சி நாசினி தெளிக்கப்படும்போது இலைகளின் கீழ்ப்பாகம் நனையுமாறு தெளித்தல் அவசியம். இவற்றைவிட வைரஸ் நோய்க் கிருமிகளாலும் தாக்கம் ஏற்படும்.

✪ நுனி அழுகுதல், சாம்பல் நோய் மற்றும் வாடல் நோய் என இளம் மிளகாய்ச் செடியைத் தாக்கும் நோய்கள் பல வகைப்படும்.

✪ யாழ். குடாநாட்டில் மிளகாய்ப் பயிரில் இலைக் சுருக்கல், தண்டழுகல் மற்றும் அடி அழுகல் ஆகிய பூஞ்சண நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கான காரணம், கத்தரி, உருளைக்கிழங்கு, மிளகாய் ஆகிய ஒரே இனப் பயிர்களை மீண்டும் மீண்டும் ஒரே நிலத்தில் பயிர்செய்தலாலாகும். இதைத் தவிர்ப்பதாயின் சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை முறையின்கீழ் சிறு தானியங்களும் இடையில் பயிர் செய்யப்படுதல் வேண்டும்.

✪ புரட்டாதி மாதத்தில் மிளகாய் அறுவடை முடிந்ததும் இரு மாதங்களில் அந்த நிலத்தில் பனிச்சாமை பயிரிட்டால் நிலத்தில் வாழ் பூஞ்சணக் கிருமிகள் அற்றுப்போகும்.

### அறுவடை

✪ பயிர் நாட்டி ஆறு வாரங்களில் பூக்கத் தொடங்கும்.

✪ பூத்துப் பிஞ்சு பிடித்து நான்கு வாரங்களின் பின் பழம் பறிக்க ஆரம்பிக்கலாம்.

✪ அறுவடை செய்த பழங்களை இரண்டு நாள்கள் நிழலில் குவித்து வைப்பதால் அவை முழுமையான செந்நிறமாகும்.

✪ ஒரு வாரமளவில் வெய்யிலில் மிளகாய்ப் பழங்கள் காயவிடப்பட வேண்டும்.

✪ தொடர்ந்து இரு வாரங்களுக்கு ஒரு தடவை பழம் பறிக்கலாம்.

மேற்கூறிய முறைகள் கைக்கொள்ளப்பட்டால் ஓர் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படும் மிளகாய்ச் செடிகளில் இருந்து 25 முதல் 30 அந்தர் வரையிலான செத்தல் மிளகாயை இந்த எட்டு மாத காலத்தில் விளைவாகப் பெறலாம். நன்கு பாரமரிக்கப்பட்ட மிளகாய்ச் செடியிலிருந்து, நாட்டி ஆறு வாரங்களின் பின்னர் எப்போதும் மொட்டு, பூ, பிஞ்சு, முற்றிய காய் மற்றும் பழம் என்பவற்றைக் காண முடியும்.

### சந்தைப்படுத்தல்

காய்ந்த செத்தல் மிளகாய் தரம் பிரித்தெடுக்கப்படல் வேண்டும். தரம் (1), தரம் (2) மற்றும் வெள்ளைச் செத்தல் என தரப்படுத்தப்படுவது சந்தைப் படுத்தும் முயற்சியை சுலபமாக்கும்

## அரவிந்த்

யாழ்.குடா நாட்டைப் பொறுத்த வரை மேற்கூறிய செயன் முறைகள் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் நாளுக்கு நாள் வேகமாக முன்னேற்றம் கண்டு வரும் இன்றைய உலகில், கமத்தொழில் தொடர்பான முன்னேற்றங்கள், கண்டுபிடிப்புக்கள், புதிய தொழில் நுட்ப அறிமுகம், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவற்றில் பற்பல புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அமுலாக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் அரச கமத்தொழிற்றிணைக்களம் இத்தொழில் துறைசார் வல்லுநர்களின் பங்களிப்புடன், நாட்டின் கமத்தொழில் வளத்தை மேலும் விருத்தியடையச் செய்ய முயன்று வருகின்றது. அந்த வகையில் இக்கமத்தொழிற்றிணைக்களத்தின் வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை இத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயப் பெருமக்கள் தாமாக விரைந்து, வலிந்து பெற்றுக்கொள்ள முயலவேண்டும். அந்த வகையில் யாழ். குடாநாட்டு விவசாயிகள் எதிர்நோக்கும் கமத்தொழில் தொடர்பான சிக்கல்களையும், சவால்களையும் தீர்த்து வைப்பதற்காக கமத்தொழிற்றிணைக்கள உயரதிகாரிகள் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வருவதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, சம்பந்தப்பட்ட விவசாயப் பெருமக்கள் தம்தேவைகள், சிக்கல்கள் என்பவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் துறைசார் வல்லுனர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் எடுத்துக் கூறி, அவர்களது வழி காட்டல்களின்படி உற்சாகத்துடன் கமத்தொழிலில் ஈடுபட்டு உயர்வு பெறலாம். ❒

# பொ.ஐ.மு.- ஜே.வி.பி. கூட்டணி அரசை தமிழ்க் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்காது!

## விநாயகமூர்த்தி எம். பி. தெரிவிப்பு

பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டணி அரசு அமைவதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றியபோது அக்கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.3ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் தலைவர் அ. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

அவர் நடைதுரையில் தெரிவித்ததாவது:-

புதிய அரசொன்றை அமைப்பதில் பொ.ஐ.மு. மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவருவதாக பத்திரிகைகள்மூலம் அறியவருகிறது. இதற்கு ஆறுமுகம் தொண்டமானும் முஸ்லிம்கட்சியினரும் ஆதரவு வழங்க உள்ளனர் எனவும் தெரியவருகிறது. தற்போது உருவாகியுள்ள அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கைமூலம் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுகளை குழப்புவதன்மூலம் நாட்டில் யுத்தம் ஏற்பட்டு தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காமல் செய்வதே இவர்களது நோக்கம்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஏற்பாட்டில் அவரது உறுதிமொழியிலேயே தற்போதைய போர் ஓய்ந்து பேச்சு நடைபெற்று வருகிறது. சந்திரிகா அரசு ஏற்பட்டால் சமாதானத்துக்கான யுத்தமே நடைபெறும். சமாதானம் ஏற்படாது, ஈ.பி.டி.பி. அமைப்போ மாற்றுக்குழுக்களோ அமைக்கும் ஆட்சிக்கு நாம் ஆதரவு வழங்கி தமிழர்களைத் துன்புறுத்துவதற்கும் காட்டிக்கொடுப்பதற்கும் இடம் ஏற்படுத்திக்கொடுக்கக்கூடாது. தென்மராட்சியிலும் வலிகாமத்திலும் சுமார் 2 லட்சம் மக்கள், தமது வீடுகளில் குடியமர முடியாத நிலையில் படையினர் நிலை கொண்டுள்ளார்கள். தமது சொந்த வீடுகளில் குடியமர்வதற்கு எவரையும் தடுக்கக் கூடாது. இராணுவம் தொடர்ந்து மக்களுக்கு அச்சுறுத்தலாகச் செயற்படுகின்றது என்று அவர் தெரிவித்தார். (ஓ-5)



சங்கானை மக்கள் வங்கி, வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவது தொடர்பாக சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கொன்றை நடத்தியது.

வங்கி முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை, உதவிப் பிரதேச செயலர் மு. சிவராசா உட்பட இதில் கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம். *(வலி. மேற்குச் செய்தியாளர்.)*

# இலங்கை, நியூஸிலாந்து, இங்கிலாந்து நாடுகளின் பணம் ஐ.சி.சியினால் தடுத்துவைப்பு

உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக நியூஸிலாந்து, இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கு வழங்கப்பட்டும் பணத்தின் ஒரு பகுதியை ஐ.சி.சி. தடுத்துவைத்துள்ளது.

நியூஸிலாந்துக்குரிய பணத்தில் 3.5 மில்லியன் டொலர்களை (சுமார் 35 கோடி ரூபா) ஐ.சி.சி. தடுத்து வைத்துள்ளது. கென்யாவில் நடைபெறவிருந்த ஆட்டத்தில் பங்குபற்ற மறுத்தமையே இதற்குக் காரணம். ஸிம்பாப்வேயில் நடைபெறவிருந்த ஆட்டத்தில் பங்குபற்ற மறுத்தமைக்காக இங்கிலாந்துக்குரிய பணத்தில் 2.5 மில்லியன் டொலர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாட்டங்கள் நடைபெறாமையால் அனுசரணையாளர்கள், ஒளிபரப்பாளர்களுக்கு தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக நஷ்டஈடு கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகவே மேற்படி பணம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று ஐ.சி.சி. அறிவித்தது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஐ.சி.சியின் நிறைவேற்றுச் சபை கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, உலகக்கிண்ணப போட்டிகளுக்கான ஒப்பந்தத்தில் வீரர்கள் உரிய திகதியில் கையெழுத்திடத் தவறியமைக்காக இலங்கைக்கான பணத்தில் 5 லட்சம் டொலா (சுமார் 5 கோடி ரூபா) தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இந்திய வீரர்கள் ஒப்பந்தத்தில் சில பகுதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், இந்தியாவுக்கான பணத்தில் 8-9 மில்லியன் டொலர்களை தடுத்துவைப்பதென போட்டிகள் ஆரம்பமாக முன்னரே ஐ.சி.சி. தீர்மானித்தது.

இவ்விவகாரத்தை விளையாட்டுகள் தொடர்பான சர்வதேச நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்வது என இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இவ்வழக்கில் ஐ.சி.சி. வெற்றிபெற்று அத்தீர்ப்பை இந்தியக் கிரிக்கெட் சபை ஏற்க மறுத்தால், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து இந்தியா விலக்கப்படும்.

இவ்வாறு ஐ.சி.சி. தலைவர் மல்கம் கிறே சனிக்கிழமை அறிவித்தார்.

(ம-5)

# தோல்வியால் அவமானமில்லை

## கங்குலி தெரிவிப்பு

"ஆஸ்திரேலியாவுடனான தேல்வியால் அவமானமில்லை". - இவ்வாறு இந்திய அணியின் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

"ஆரம்பத்தில் துடுப்பாட்டத்திற்கு உகந்ததாக மைதானம் இல்லை. இருந்தாலும் ஆஸ்திரேலிய அணியினா உண்மையான சம்பியன்களைப் போல் ஆடினர். இந்திய அணியைவிட ஆஸ்திரேலிய அணியினர் சிறந்த அணி என்பதில் சந்தேகமில்லை.

பந்துவீச்சாளர்கள் 3 பேருக்கும் இது எதிர்மாறான நாள். இச்சுற்றுப் போட்டி முழுவதும் அவர்கள் மிகச் சிறப்பாக பந்துவீசினர். இறுதி ஆட்டத்தை அடையும் அளவுக்கு எல்லோரும் சிறப்பாக ஆடினர். அதில வெல்லவில்லை என்றாலும் அவமானப்படுவதற்குக் காரணம் ஏதுமில்லை" - என்றார் கங்குலி.

செய்தியாளர் மாநாடொன்றில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "ஆஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தமை சரியானதே என்றார்.

"இத்தீர்மானம் குறித்து கவலையடையவில்லை. காலையில் பந்துவீச்சுக்குச் சாதகமாகத்தான் ஆடுகளம் இருந்தது.

"ஆனால், நாம் இன்று எம்மைவிட மிகச் சிறப்பான அணியொன்றிடமே தோல்வியுற்றோம் அதேவேளை, ஓரணியாக விளையாடுவதற்குக் கற்றுக் கொண்டோம் பலருக்கு இதுவே முதல உலகக்கிண்ணப் போட்டி. அழுத்தங்களை அவர்கள் எதிர்கொண்ட விதம் பாராட்டுக்குரியது." என்றார்.

5ஆவது பந்துவீச்சாளராக அனில கும்ளேயை சேர்க்காமை குறித்து கங்குலி கருத்துத் தெரிவிக்கையில்

"5ஆவது பந்துவீச்சாளரை சேர்ப்பது அவர் சகலதுறை வீரரா இலலையா என்பதிலேயே தங்கியுள்ளது. மாறாக 6 துடுப்பாட்ட வீரர்களுடன் நாம் விளையாட முடியாது." - என்றார்.

(ம)

# கிண்ணத்தையே விரும்பினேன் என்கிறார் டெண்டுல்கர்

உலகக்கிண்ணத் தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதைப் பெற்றமையால் மகிழ்ச்சியடையவில்லை. சம்பியன் கிண்ணமே எனக்கு தேவையாக விருந்தது.

இவ்வாறு இந்திய துடுப்பாட்ட நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியிடம் 125 ஓட்டங்களால் தோல்வியடைந்த பின் டெண்டுல்கர் கூறுகையில்.

"நான் மிகவும் ஏமாற்றமடைகின்றேன். தொடரின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானதைவிட நாம் கிண்ணத்தைத் தூக்கியிருந்தால் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பேன்" - என்றார்.

அரையிறுதிப் போட்டிவரை 668 ஓட்டங்களைப் பெற்ற டெண்டுல்கர் இறுதிப் போட்டிக்கு முன்னரே தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதை வென்றுவிட்டார். ஆனால், இறுதிப் போட்டியில 4 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார்.

ஆனால், அணிக்கு மிகவும் தேவையான நேரத்தில் முக்கிய பங்காற்றத் தவறிவிட்டார் என்ற கருத்தை அவர் நிராகரித்தார்.

"நாம் ஓர் அணியாக விளையாடுகிறோம் என்றே எண்ணுகிறேன். நான் தனி நபராக விளையாடுவதில்லை.

"நாணய சுழற்சியில் வெற்றி பெற்றபோது எமக்கு சிறந்த வாய்ப்பு இருப்பதாகவே கருதினேன். ஏனெனில், ஆடுகளம் பந்து வீச்சுக்குத்தான் சாதகமாக இருந்தது.

ஆனால், எமது பந்துவீச்சாளர்களுக்கு மோசமான நாளாக அமைந்துவிட்டது.

"பொன்ரிங் மிகச் சிறப்பாக ஆடினார். பொன்ரிங்கும் டேமியன் மார்டினும் ஒற்றை ஓட்டங்களைப் பெறுவதைத் தவிர்த்தனர். நான் பார்த்த மிகச் சிறந்த இன்னிங்ஸ்களில் இதுவும் ஒன்று".

- இவ்வாறு டெண்டுல்கர் கூறினார். (ம)

# தேர்வாளராகிறார் அரவிந்த டி சில்வா

சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அரவிந்த டி சில்வா இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழுவில் சேர்க்கப்படவுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவிலிருந்து ரணில் அபேநாயக்க அண்மையில் ராஜினாமாச் செய்தார். இதனால் தற்போது இருவர் மாத்திரமே தேர்வுக் குழுவில் உள்ளனர்.

கைடி அல்விஸ் (தலைவர்), ரோஜர் விஜேசூரிய ஆகியோரே இவ்விருவருமாவர்.

இந்நிலையில், கடந்த காலத்தில் இருந்ததைப் போன்று தேர்வுக்குழுவில மொத்தமாக 5பேரை நியமிப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இவர்களில் அரவிந்த டி சில்வாவும ஒருவராவார். உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் ஓய்வுபெற்றுள்ள அரவிந்த 19 வருடகாலம் இலங்கை அணியில் முக்கிய வீரராகத திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் தேர்வுக்குழுவிற்கு கைடி அல்விஸ் தொடர்ந்தும் தலைவராக இருப்பார். தேர்வுக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக அரவிந்தவுடன் மேலும் பல முன்னாள் வீரர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

(ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.தி.மகாலிங்கம்**

*(கிராம உத்தியோகத்தர், அல்லாரை J/322)*

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளமையை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.



காலநேரம் பாராமல் கடமையுணர்வுடன் சேவை செய்து அனைவரின் பேரன்பையும் நன்மதிப்பையும் பெற்றுள்ள கிராம உத்தியோகத்தர் அவர்கள் தொடர்ந்தும் இப் பகுதியில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்தும்,

**யஸ்மின் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும், அல்லாரை வடக்கு வாழ் மக்களும்.**

*அல்லாரை வடக்கு, கொடிகாமம்.* (15953)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் 2003.03.17ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிசுவாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட கைதடி கிழக்கு, கைதடி

**மு.சே.இராசையா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்திப் பேருவகை கொள்ளும் அதேவேளை, அவர் மேன்மேலும் பல சிறப்புகள் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து சேவையாற்ற இறையருள் கைகூட வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம்.

**க.ச.கணபதிப்பிள்ளை**
**சி.கனகரத்தினம்**
(கதிர்வேலவன் அரிசி ஆலை, கைதடி)

கைதடி கிழக்கு,
கைதடி.

(15946)

## FORUT - JAFFNA

There exists a temporary vacancy for the post
Documentation officer
at FORUT's office in Jaffna .

**Necessary Qualifications:**
- University degree holder
- Excellent command of written & spoken English
- Ability to operater computer

Applications must reach:
Programme Manager,
FORUT,
*67, Temple Road, Jaffna.*
Before 31st March 2003
only short listed candidates will be called for an interview.
*Applicants must be below 30 years.*

(C/37092)

## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

இன்று 25.03.2003 முதல் 14.04.2003 வரை

சகல வகையான புடைவைகளையும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/37090)


## கண்ணீர் அஞ்சலி

வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் பொறுப்பதிகாரி

**M.கந்தசாமி**

அவர்களின் அன்பு மகன்

**கந்தசாமி சுஜிந்தன்**

அவர்கள் 22.03.2003 இல் அகால மரணமடைந்த செய்திகேட்டு மிகவும் அதிர்ச்சியானோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*வலி.கிழக்குப் பிரதேச சபை*
*உப அலுவலகம்,*
*அச்சுவேலி.*

பொறுப்பதிகாரி,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(C/37093)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் இராசரத்தினம் (இரத்தினம்)

*(உரிமையாளர் - பொன்னம்பலம் அன்சன்ஸ், தலவாக்கொல்லை)*

நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசரத்தினம் (உரிமையாளர் - பொன்னம்பலம் அன்சன்ஸ், தலவாக் கொல்லை) நேற்று (24.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் தலவாக்கொல்லையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தாயகம்'*
*புலவர் வீதி, நவாலி வடக்கு.* (15951)

தகவல்:
சு.குலசேகரம் (மைத்துனர்)

### திருமதி வஸ்தலா நடராஜா

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வஸ்தலா நடராஜா நேற்று (24.03.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா தம்பதிகளின் அன்பு மகளும் நடராஜாவின் அன்பு மனைவியும் மற்றும் கோணேஸ்வரியின் தாயாரும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் மாமியும் கிரிதரன், காலஞ்சென்ற மனோகரன் (மதன்) மற்றும் காண்டீபன், நவநீதன், கௌசல்யா, பாலகுமார், ஜெயந்தி ஆகியோரின் பேர்த்தியும் , கிரிதர்ஷனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54, வெங்கடேசன் வீதி,*
*பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (15954)

தகவல்:
கிரிதரன் (பேரன்)


## ராம்கோ சிமெந்து RAMCO CEMENT

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சிமெந்து பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

**முக்கிய குறிப்பு:-**

1) பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளுக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் முன்னுரிமை அளிக்கப்படும்.
2) சிமெந்து கொள்வனவு செய்பவர்களுள் சொந்த லொறி வைத்திருப்பவர்கள் தங்கள் லொறிகள்மூலம் பருத்தித்துறை இறங்குதுறையில் நேரடியாக ஏற்ற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.
3) பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்ற விரும்பும் லொறி உரிமையாளர்கள் எமது நிறுவனத்திடம் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**ஈஸ்வரபகவான் அன் கம்பனி**

*91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 021-222 2850*

(சி-37095)

# பக்தாத்துக்குள் எதிரிகளை நுழையவிடாது ஈராக் துருப்பினர் கடும் தாக்குதல்: 11 அமெரிக்கப்படையினர் உயிரிழப்பு!

## மேலும் 50 பேர் படுகாயம்: பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர்

**ஈராக் தலைநகரான பக்தாத்தை நோக்கி முன்னேற முயன்ற அமெரிக்க - பிரிட்டிஷ் தரைப் படைகளை எதிர்த்து ஈராக் படைகள் கடுமையாகச் சண்டையிட்டு அப்படைகளை தடுத்து வருகின்றன. பக்தாத்துக்கு தெற்கே சுமார் 80 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கர்பாலா நகரம், அதற்கு அப்பாலுள்ள நஸ்ரியா, பஸ்ரா ஆகியவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் இச்சண்டைகள் நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கர்பாலா நகரப் பகுதியில் மூன்றுமணி நேரமாக சண்டை நடைபெற்றது. இச் சண்டைகளில் 11 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.**

ஞாயிறு இரவு முழுவதும் பக்தாத் நகரம் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகளைப் போட்டுத் தாக்கின. நேற்றுக் காலையும் இத்தாக்குதல்கள் தொடர்ந்தன. ஈராக் நகரான நஜாப் அருகே பாரிய இரசாயன ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை அமெரிக்கப் படைகள் ஞாயிறன்று கண்டுபிடித்த தாக 'ஜெருஸலேம் போஸ்ட்' பத்திரிகையும் அமெரிக்கச் செய்திச் சேவைகளும் தெரிவித்தன.

ஈராக்கின் தெற்கு நகரான நஸ்ரியாவில் நடந்த பயங்கர சண்டையில் 11அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 5 வீரர்களை ஈராக் படைகள் சிறைப்பிடித்துள்ளன. இவர்கள் தவிர மேலும் 10 அமெரிக்க வீரர்களையும் 2பிரிட்டிஷ் வீரர்களையும் காணவில்லை என அறிவிக்கப்பட்டது. 50 பேர் காயமடைந்தனர்.



ஈராக்கின் துறைமுகநகரான உம்குவாஸிரில் ஈராக் படைகளின் தாக்குதலை எதிர்கொள்ளும் அமெரிக்கப்படையினர்.

நஸ்ரியா அருகே நடந்த சண்டையில் அமெரிக்கப் படைகள் தாக்கியதல் பல அப்பாவி ஈராக் மக்கள் பலியாகினர். இதையடுத்து, அமெரிக்கப் படைகள் மீது ஈராக் பயங்கரத் தாக்குதல் நடத்தியது. இதில் அமெரிக்காவின் பல டாங்கிகளை ஈராக் வீரர்கள் சிதறடித்தனர்.

கொல்லப்பட்ட 11 வீரர்களில் 7 பேர் போர் முனையில் கொல்லப்பட்டனர் எனவும் மேலும் 4பேரை ஈராக் வீரர்கள் பிடித்து சுட்டனர் எனவும் 5பேரை மட்டும் உயிரோடு விட்டு வைத்து தொலைக்காட்சியில் காட்டினர் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

நஸ்ரியா நகரில் நடைபெற்ற சண்டையில் 11 படையினர் கொல்லப்பட்டனர். குறைந்தது 25 படையினர் காயமடைந்தனர் என்று அமெரிக்க அதிகாரிகளும் தெரிவித்திருக்கின்றனர்.

அமெரிக்காவின் வாகன விநியோக தொடரணி ஒன்று நஸ்ரியாவில் ஈராக் துருப்புக்களால் பதுங்கி இருந்து தாக்கப்பட்டது என்பதை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். இதில் 12 அமெரிக்கப் படையினரைக் காணவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

ஈராக் படையினரின் எதிர்த் தாக்குதல் அமெரிக்கப் படையினரை வியப்படையச் செய்திருப்பதாக நஸ்ரியாவில் அமெரிக்கப் படையினருடன் இருக்கும் பி.பி.ஸி.நிருபர் அன்ட்ரு நோர்த் தெரிவித்திருக்கிறார்.

## குவைத்தில் தொடங்கி இன்றுவரை.......

ஓக.2,1990: குவைத்தில் ஊடுருவித் தாக்குதலைத் தொடங்கியது ஈராக். 1980 - 1988 ஈரான் - ஈராக் சண்டையின்போது இழந்த வருமான இழப்பை ஈடுகட்டுவதற்காக அதிக அளவு பெற்றோலியப் பொருள் உற்பத்தியில் ஈராக் ஈடுபட்டதாகக் குவைத குற்றஞ்சாட்டியது. இதனால், ஆத்திரமுற்ற சதாம் ஹுசைன், குவைத் மீது தாக்குதல் நடத்தினார். இதையடுத்து, ஈராக்மீது பொருளாதாரத் தடை விதித்தது ஐ.நா. பாதுகாப்புச் சபை. குவைத்தை ஈராக்கின் பிடியிலிருந்து விடுவிக்கப் படைபலத்தை பிரயோகிக்கும்படியும் ஐ.நா. பாதுகாப்புச்சபை உத்தரவிட்டது.

ஜன.17, 1991: விமானப்படைத் தாக்குதலைத் தொடங்கின அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படைகள். அடுத்த மாதமே ஈராக்குக்குள் படையெடுத்தன. ஈராக் படைகளைச் சுற்றிவளைத்துப் பிடித்தன.

பெப்.26, 1991: குவைத் விடுவிக்கப்பட்டது.

மார்ச் 2, 1991: ஈராக்கில் உள்ள பேரழிவு ஆயுதங்களை அழிக்கவும், குவைத்தின் மறுபுரைமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐ.நா. உத்தரவு.

டிசெ.16, 1998: பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க ஒத்துழைப்புத் தரவில்லை என்று கூறி சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் முறைப்பாடு. அதன்பிறகு 4 நாள்கள் கழித்து அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் தலைநகர் பக்தாத் மீது குண்டு மழை.

டிசெ.17, 1998: ஈராக் ஆயுத ஒழிப்பு ஆணைக்குழுவை அமைப்பதற்கான தீர்மானம் ஐ.நா.சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஜன.27, 1999: ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ஹான்ஸ் பிலிக்ஸுக்கு ஒத்துழைப்பு நல்கமாட்டோம் என ஈராக் அறிவிப்பு.

நவ.08, 2002: பேரழிவு ஆயுதங்களை அழிக்காவிட்டால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எச்சரிக்கை விடுப்பது தொடா்பான தீர்மானம் ஐ.நா.சபையில் நிறைவேற்றப்பட்டது.

நவ.27, 2002: நவ.8இல் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் பணியைத தொடங்கினர்.

டிசெ.7, 2002: பேரழிவு ஆயுதங்கள் தங்களிடம் இல்லை என்று ஐ.நா.விடம் ஈராக் தெரிவிப்பு; இது உண்மைக்குப் புறம்பானது என்று அமெரிக்கா அறிவிப்பு; ஈராக் அறிவிப்பு முழுமையானது அல்ல என ஐ.நா.தெரிவிப்பு.

மார்ச் 7, 2003: தடைசெய்யப்பட்ட பேரழிவு ஆயுதங்களை மார்ச் 17 இற்குள் அழிக்க சதாமுக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் ஸ்பெயின் ஆணை; ஈராக் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தீர்மானங்களைக் கொண்டு வரக்கூடாது என பிரான்ஸ் தலைமையில் சில நாடுகள் அறிவிப்பு.

மார்ச்17, 2003: ஐ.நா. சபையில் கொண்டுவரவிருந்த தீர்மானத்தை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் நாடுகள் திரும்பப் பெற்றன. ஈராக்கைவிட்டு சதாம் வெறியேற வேண்டும்; இல்லையெனில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படைகள் ஈராக்கைத் தாக்கும் என புஷ் அறிவிப்பு.

மார்ச் 18, 2003: புஷ் எச்சரிக்கையை நிராகரித்தது ஈராக்.

மார்ச்20, காலையில் தலைநகர் பக்தாத் அருகே சில முக்கிய இலக்குகளை நோக்கித் தாக்குதலைத் தொடங்கின அமெரிக்கப் படைகள்.

## கடவுளின் கட்டளையை ஏற்று சாத்தான்களை தோற்கடிப்போம்!

### அதிபர் சதாம் வீரமுழக்கம்

பக்தாத்,மார்ச்25



போரில் அமெரிக்கப் படைகளை வீழ்த்தி வெற்றியை வசமாக்குவோம் என்று நேற்று ஈராக் தேசியத் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றிய ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் கூறினார்.

சதாம் காயமடைந்துவிட்டதாகவும், அவர் உயிருடன் இல்லை என்றும் பலவித தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்த நிலையில், அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் நேற்றுக் காலை தொலைக்காட்சியில் அவர் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

வெற்றி நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கடவுள் கட்டளைப்படி எதிரிகளின் குரல்வளையை நெரிப்போம். அவர்களை தோற்கடிப் பதன்மூலம் நாம் சாத்தான்களை தோற்கடிப்போம்.

அமெரிக்கப் படைகள் இம்முறை ஈராக்கை ஆக்கிரமிக்கவே போர் தொடுத்துள்ளார்கள். ஆனாலும், கடவுள் நமக்கு துணையிருப்பார். அவர்கள் மிகப்பெரும் இழப்பைச் சந்திப்பார்கள். நம்மால் முடிந்தவரை எதிரிப் படைகளை பலவீனப்படுத்துவோம்.

போர்க்களத்தில் வீரத்துடன் நடை போடும் ஈராக் வீரர்களுக்கு எனது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இராணுவ உடையில் கம்பீரமாகத் தோன்றி பேசிய சதாம் தனது உரையின்போது நிதானமாகவே காட்சியளித்தார். (ஒ)

## ஈரான் இராணுவம் திடீர் தாக்குதல்!

ஈரான் - ஈராக் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் மீது ஈரான் இராணுவத்தினர் திடீர்தாக்குதல் நடத்தினர். அப்பகுதியில் பறந்த அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்களை நோக்கியும் ஈரானியப் படைகள் சுட்டன.

போர் தொடங்கியதுமுதல் ஈரான் வான் எல்லைக்குள்ளும் அமெரிக்க விமானங்களும், ஹெலிகொப்டர்களும் ஊடுருவி வருகின்றன. அதே போல இரு ஏவுகணைகளும் ஈரானுக்குள் விழுந்து வெடித்தன.

இதற்கு ஈரான் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இந்நிலையில், அமெரிக்கக் கொமாண்டோ படையினருக்கும் ஈராக்கியப் படைகளுக்கும் கடந்த இரு நாள்களாக கடும் மோதல நடந்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்கா ஏவிய ஏவுகணைகள் ஈரான் பகுதிக்குள் வீழ்ந்து வெடித்தன. இதனையடுத்தே அமெரிக்கப் படையினர் மீது ஈரானிய இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.(ஒ)

## அமெரிக்க ஏவுகணை தாக்கி சிரியாவில் 5பேர் மரணம்!

லண்டன்,மார்ச்25

அமெரிக்கப் படையினர் ஏவிய ஏவுகணை சிரியாவில் பஸ் ஒன்றைத் தாக்கியது. இச் சம்பவத்தில் 5 சிரியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 10 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றது. ஈராக் - சிரியா எல்லைப் பகுதியில் இது இடம்பெற்றுள்ளது.

சிரிய எல்லைப் பகுதியிலிருந்து பாதுகாப்பான வேறிடத்துக்குச் செல்வதற்காக 15பேர் ஒரு பஸ்ஸில் அமர்ந்திருந்ததாகவும் -

அப்போது விண்ணிலிருந்து தரையில் உள்ள இலக்கைத் தாக்க அமெரிக்கப் படையினர் ஏவிய ஏவுகணை இலக்குத் தவறி சிரியப் பகுதிக்குள் நின்றிருந்த பஸ்ஸைத் தாக்கியது. இதில் பஸ்ஸிலிருந்தவர்களில் 5பேர் உயிரிழந்தனர். 10பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து சிரியாவில் அமெரிக்க எதிர்ப்பலை வேகமாகப் பரவி வருவதாகக் கூறப்படுகிறது.

உலக அரங்கில்



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த காஷ்மீரிப் பண்டிட்டுகளின் சடலங்களுக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## காஷ்மீரில் 24 இந்துக்கள் படுகொலை!

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் 24 காஷ்மீரி இந்துக்களை நேற்று அதிகாலை காஷ்மீர் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இறந்தவர்களில் 11 பெண்கள், 2 குழந்தைகளும் அடங்குவர்.

சுமார் 25 பேர் கொண்ட குழுவாக வந்த தீவிரவாதிகள் அனைவரும் இராணுவ உடையில் இருந்தனர். அந்தக்கிராமத்தைச் சுற்றிவளைத்த பின்னர் அங்கிருந்த சிறுபான்மையின மக்களான இந்துக்களை திறந்த வெளி மைதானத்திற்கு வருமாறு அழைத்தனர். மைதானத்தின் நடுவே அவர்களை நிற்கவைத்த தீவிரவாதி கள் கண்மூடித்தனமாக அவர்களை நோக்கிச் சுட்டனர். இதில் 24 பேர் உயிரிழந்தனர். (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆறாவது துணை வேந்தராக பதவி ஏற்றுள்ள

**பேராசிரியர் சு.மோகனதாஸ்**

அவர்களின் சேவை சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மத்தொனி, கரவெட்டி.* — நல்லையா மோகனதாசன் குடும்பம் (15933)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஆங்கிலநெறி இறுதியாண்டுப் பரீட்சையில் 8C,3S என்ற பெறுபேற்றுடன் சித்தியடைந்த எமது நிறுவன முன்னணி ஆங்கில ஆசிரியர்

**திரு.வதிரிவாசன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாங்ற்றன் அக்கடமி,
துன்னாலை.

(15943)

## இதய பூர்வமான அஞ்சலிகள்



*பருத்தித்துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர்*

திருமதி சுகுணாலினி விஜயரத்தினம் அவர்களின் அன்புக் கணவா

**பொன்னம்பலவாணர் விஜயரத்தினம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடையும் நாம், அன்னாரின் 45 ஆவது நினைவு நாளில் அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தி கின்றோம். அன்னாரது பிரிவினால் துயருற்றி ருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரி வித்துக கொள்கின் றோம்.

*யாழ்ப்பாணம்* (C-37091) - கலாசார உத்தியோகத்தர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில |
|---|---|---|
| 18 - 11 - 1918 |  | 09 - 04 - 1999 |

**அமரர் க.சி. செல்லப்பா**

*(உரிமையாளர். தாமோதரா ஸ்ரோர்ஸ். மன்னார்)*

*திதி: 25. 03. 2003*

எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்த நான்காம் ஆண்டை ஈரவிழிகளுடன் சந்திக்கும் பாச உறவுகளின் கண்ணீர்க்காணிக்கை.

*இணுவில் மேற்கு, இணுவில்.* (15942) - குடும்பத்தினர்.


உ




??? விபரம் நாளை.....


## ஈழவேந்தன் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்மத்திய கல்லூரியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு 'ஈழத்தமிழ்' இனத்தின் எதிர்காலம் என்ற பொருளில் தமிழ் ஈழவிடுதலை அணிச்செயலாளர் மா.க.ஈழவேந்தன் உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் சந்நிதி யான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப் படும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ் வார நிகழ்வாக ஞானச்சுடர் பங்குனி மாத மலர் வெளியீடு இடம்பெறவுள் ளது.

மலருக்குரிய வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் சீ.வைகுந்த சாமியும் மதிப்புரையை இந்து கலா சார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கமும் நிகழ்த்த உள் ளார்கள். (ஒ)

## விவசாய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் நடத்தும் விவசாயக் கருத் தரங்கு மேற்படி நிறுவனத்தில் நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நிறுவனத் தலைவர் த.குகதாசன் தலைமையில் நடைபெற உள்ளது. அதி.வண.பேராயர் கலாநிதி சு.ஜெப நேசன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கில் பயிர் அபிவிருத்தியும் இனவிருத்தியும் என்ற விடயம் குறித்து பேராசிரியர் வி.அருள் நந்தியும் கால்நடை அபிவிருத்தியும் இனவிருத்தியும் என்ற விடயம் குறிதது வைத்திய கலாநிதி இ.ஞானசேகரனும் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஒ)

## நாய்களை அழிக்கும்பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.மாநகர சபை எல்லைக்குட் பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், கட்டாக்காலி நாய்களை கொன்று புதைப்பதற்கு இடமில்லாத தால் அப்பணி நிறுத்தப்பட்டுள்ளதாக மாநகரசபை பொதுச் சுகாதார பொறியி லாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரி வித்தார்.

கடந்த காலங்களில் கட்டாக்காலி நாய்களை மாநகரசபை ஊழியர்கள் பிடித்து கொன்று யாழ். பண்ணைக் கடற்கரைப் பகுதியில் புதைத்து வந தனர். ஆனால், அப்பகுதியில் தற்போது புதைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள் ளது. இதனால் இந்தப் பணி இம்மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அத்துடன் விசர் நாய்களின் எண் ணிக்கை அதிகரிப்பதனையும் கட்டுப் படுத்த முடியாதுள்ளதாக மாநகரசபை அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, 2002 ஆம் ஆண்டில ஆயிரத்து 329 கட்டாக்காலி நாய்களும 2003 ஆம் ஆண்டில் இதுவரை 300 கட்டாக்காலி நாய்களும் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் பிடித்து அழிக்கப்பட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-180)

## தென்னங்கன்று விநியோகம்

தென்னை அபிவிருத்தி சபையின் பளைப் பிரதேச அலுவலகத்தினர் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு தென் னங்கன்றுகளை மானிய அடிப்படை யில் வழங்கி வருகின்றனர். ஒரு குடும்பத்துக்கு இரண்டு தென்னங்கன்று கள் வீதம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.


## ஆள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கூலி ஆளகள் தேவை.

தொடர்பு:-
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
*31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
(15935)

## தேவை

விற்பனை நிலையத்திற்கு பெண்பிள்ளைகள் தேவை. இன்று செவ்வாய், நாளை புதன்கிழமைகளில் நேரில் வரவும்.

**சாயி எலெக்ரோனிக்ஸ**
*546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.P : 222 5025
(15940)

## தேவை

1) Trained Nurses
2) பெண் மருந்துவிற்பனையாளர்
3) தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்கள் ஆகியோர் தேவை

தொடர்பு :

**சம்பந்தர் மொடோன் கிளினிக்,**
08, இராமையாச் செட்டியார் வீதி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
*(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)*

(15947)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி கு.வளர்மதியின் அன்புத் தாயார்

**குமாரசாமி செல்லம்மா**

17.03.2003 இல் காலமானதால் துயருறும் அவரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அனனாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய பாடசாலைச் சமூகம்.

*உடுவில்.* (15939)

## கண்ணீர் அஞ்சலி



23.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமான

**திருமதி ஏரம்பமூர்த்தி ஜானகியம்மா**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின் றோம்.

*இணுவில்.* (15949) - உறவினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஏரம்பமூர்த்தி ஜானகியம்மா

காங்கேசன்துறையை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி ஏரம்பமூர்த்தி ஜானகியம்மா 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கயாத்துறை ஆனந்தப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும் முன்னாள் ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள உதவி ஆணையாளர் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் லோகநாயகி (சர்க்கரை), Dr. முன்னைநாதவரப்பிரசாதம் (கனடா), கணேஸவரப் பிரசாதம் (ஆசிரியர், தொட்டவத்தை அல்பஹறியா ம.வி., பாணந்துறை), தையல்நாயகி, Dr. ஸ்ரீஸ்கந்தவரப்பிரசாதம் (U.K.), புவனநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வசுந்தரராஜா (முன்னாள் களஞ் சியப் பொறுப்பாளர், பிறிமா ஆலை, திருகோணமலை), இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), ஸ்ரீரங்கராஜா (சிறாப்பர், புகையிரத திணைக்களம், கொழும்பு), ஜெயதேவி (கனடா), Dr. சந்திரோதயம் (தெஹிவளை), தேவயானி (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வநாயகி, செல்வக்குமரன் (அமெரிக்கா), உமாசுதன் (ஆஸ்திரேலியா), வேதநாயகி (நோர்வே), காயத்திரி (ஜேர்மனி), ஜானு (கனடா), ஜானகி, மனோகரி (U.K.) சஞ்சீவ் (U.K.), கஜனி (கனடா), கமலினி, அபர்ணா (கனடா), புவனேந்திரன் (அதிபர், கோணேஸ்வர இந்துக் கல்லூரி, திருகோண மலை), ஸ்ரீரங்கநாதன் (நோர்வே), சிவானந்தன் (ஜேர்மனி), ஆனந்தராசா (U.K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜனனி, ஜனகன், பிரவின்னா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2003) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் வைத்தியசாலை விடுதி, மக்லவுட் பொது வைத்தியசாலை, இணுவிலில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வைத்தியசாலை விடுதி, மக்லவுட் பொது வைத்தியசாலை, இணுவில்.* (15948)

தகவல்: கணேஸ வரப்பிரசாதம் (மகன்)

## பேராயிரம் கரன்

(Chief Officer, இரும்பொறை)

33,சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கரன் (தலைமை அதிகாரி இரும்பொறை) கடந்த 10.3.2003 அன்று நடந்த கப்பல் தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

அன்னார் பேராயிரம்-இராசலட்சுமி தம்பதிகளின் (புதுக்குடியிருப்பு) அன்பு மகனும், இராஜராஜன் (மன்னவன்), குகப்பிரியா (யாழ்ப்பாணம்), ஸ்ரீ துவாரக பாலகிருஷ்ணா (செந்தாளன்) ஆகியோரின் அன்புச் சகோதர னும், துஷ்யந்தியின் அன்பு மைத்துனருமாவார்.

அவரது திருவுருவப்படம் 21.3.2003 அன்று அவரின் தற்காலிக வதிவிடத்தி லிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகல் திரைநீக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர் கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

*தற்காலிக முகவரி:-*
கலைமகள் அரிசி ஆலை ஒழுங்கை,
துர்க்கா வீதி, 2ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (15937)

தகவல்:- குகப்பிரியா (சகோதரி)

## கந்தர் சுப்பிரமணியம்

(வறுத்தலைவிளான்)

கட்டுவன், வறுத்தலைவிளானைச் சேர்ந்தவரும் தற்போது உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் வசித்தவருமாகிய கந்தர் சுப்பிரமணியம் நேற்று (24-3-2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், கேதாரகௌரிஅம்மா அவர்களின் அன்புக் கணவரும் ஆச்சிமுத்து, கதிர்காமர், குலத்துங்கர், இரத்தினம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், சுகுணேஸ்வரி(ஜேர்மனி), சுகுமாரி (லண்டன்), சுசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெக தீசன் (ஜேர்மனி), ஆனந்தன் (லண்டன்), குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷா, நிரேன், நிரோஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

*கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.* (15923)

தகவல்: கேதாரகௌரிஅம்மா (மனைவி), சேவையர் சின்னத்துரை (மருமகன்).

# இவ்வாண்டில் கூ.மொ.வி.நிலைய அரிசி இறக்குமதி உடன் நிறுத்தம்

கொழும்பு,மார்ச்25

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இவ்வாண்டில் அரிசி இறக்குமதி செய்வது உடனடியாக நிறுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை, கிரிதலைப் பகுதியில் நடைபெற்ற அறுவடை விழாவில் நேற்றுமுன்தினம் பங்கு பற்றியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் அமோக நெல் விளைச்சல் கிடைத்திருப்பதால் விவசாயிகளைப் பாதுகாக்க அரிசி இறக்குமதியை நிறுத்துவதென அரசு தீர்மானித்திருக்கிறது எனவும் பிரதமர் அங்கு சொன்னார்.

பிரதமர் ரணில் சம்பிரதாய முறைப்படி நூற்றுக்கணக்கான விவசாயிகள் சகிதம் வயலில் இறங்கி அறுவடை விழாவை பின்னர் ஆரம்பித்து வைத்தார். (ம)

# ம. கிழக்கில் இலங்கையர் எவரும் இதுவரை இடம்பெயரவில்லை

கொழும்பு,மார்ச்25

ஈராக் யுத்தம் காரணமாக ஈராக்கிற்கு அருகிலுள்ள நாடுகளில் இருக்கும் இலங்கையர் எவரும் இதுவரை இடம்பெயரவில்லை என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவையும் செம்பிறை சங்கத்தையும் மேற்கோள்காட்டி வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம)

# மரண அறிவித்தல்

## மா. சிவசுப்பிரமணியம் செட்டியார்

*(உப்புச் செட்டியார்)*

மணிக்கூட்டு ஒழுங்கை, நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட மாடசாமிச் செட்டியார் சிவசுப்பிரமணியம் செட்டியார் நேற்று (24.03.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகரத்தினம் செட்டியாரின் அன்புத் தம்பியும் திருமதி சௌந்தரம் நாகரத்தினத்தின் அன்பு மைத்துனரும் லெட்சுமி பிரபா (யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சந்திரபிரபா, பிரபாகரன் (சுவிஸ்), திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவேந்திரகலாநிதி (யாழ்/ நில அளவைத் திணைக்களம்), ஞானதேசிகன் (யாழ்.பல்கலைக்கழகம்), பிறிஸ்கா (சுவிஸ்), கஜேந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜகேசன், நிரோகேசன், சிவநிரோஜினி, மஞ்சுளானி, பிரீத்திசெட்டி, தஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*17, (43) மணிக்கூட்டு ஒழுங்கை,*
*நீராவியடி யாழ்ப்பாணம்.* (15955)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்25

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடக்கும் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாதான வழிமுறைகளில் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான செயற்திட்டத்தின் கீழ் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் மனிதநேய அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ்ரவீந்திரன், அரசியல் யாப்புச் சபையைச் சேர்ந்த எஸ்கருணாகரன், சட்டத்தரணி ரெமீடியஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (ம-10)

# செயலமர்வு ஒத்திவைப்பு

தென்மராட்சி,மார்ச்25

தென்மராட்சி வலய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த ஆசிரியர் தரங்கணிப்பு செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

# மோ.சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்து பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,மார்ச்25

மோட்டார் சைக்கிளில் பின்புறம் இருந்து பயணம் செய்தவேளை தவறி விழுந்த பெண் ஒருவர் தலையில் அடிபட்டு உயிரிழந்தார்.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கேரதீவு வதி, நாவற்குழி கிழக்கு, கைதடி என்ற முகவரியைச் சேர்ந்த தளையசிங்கம் பராசக்தி (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார். (ம-4)

# ஏசியன் நிறுவனம் தரும்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

26. திருமதி சறோஜினிதேவி பாலநாதன்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(455161703X)

27. சிவநேசன் திருவனந்தன்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
(791822246V)

28. முருகையா கோபிதர்சன்
53, கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.
(823380704V)

29. சுபத்திரா ஜீவரெட்ணம்
யாழ்.பல்கலைக்கழகம்
(806071338V)

30. தர்ஷிகா சிவபாலச்சந்திரன்
பெரியவிளான், இளவாலை.
(865651570V)

31. சோமேஸ்வரபிள்ளை பதுந்தன்
மருத்துவபீடம், யாழ்ப்பாணம்.
(781110663V)

32. மாதன் மகாலிங்கம்
லிங்க வாசா, கைதடி மேற்கு.
(580260675X)

33. அருந்தவநாதன் சதீஸ்
928, சுவிச் சென்ரர், வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
(833212176V)

34. திருச்செல்வம் சர்மிளா
7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
(81177330V)

35. இராசரத்தினம் ஜெகன்
922, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(782814427V)

36. பாலேந்திரன் ஜெயதீபன்
ஆனைக்கோட்டை.
(770804272V)

37. செல்வராசா துஷியந்தி
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
(811773301V)

38. இராமச்சந்திரன் திருவரங்கன்
பங்களா லேன், மல்லாகம்.
(812761102V)

39. குஞ்சிதபாதம் பகீரதன்
415, நாவலர் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
(811123021V)

40. தவமணி அனுஜா
ஆஸ்பத்திரி முன் வீதி,
நாயன்மார்கட்டு.
(835201848V)

41. வல்லிபுரம்பிள்ளை சுதர்சன்
109/6 பலாலிவீதி,
திருநெல்வேலி தெற்கு.
(771363814V)

42. K. அருள்
57, கஸ்தூரியார் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(683290807V)

43. தனிசா ரவீந்திரன்
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.
(670162974V)

44. ரதிகலா கனகரத்தினம்
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
(807681141V)

45. நவரட்ணவேல் றஞ்சிதா
14, அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம்.
(566320851V)

46. தவராசா ஜெயகாந்
7, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
(840211295V)

47. ரசிகரன் லோஜன்
கல்வயல், சாவகச்சேரி.
(787850428V)

48. சு. புலேந்திரன்
138/2 இராசாவின்தோட்டம்
(830414541V)

49. வரதராஜன் தயாநிசன்
42. B.A. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை.
(0902042464)

50. தங்கநாதன் அகீபன்
கலையரசு வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(521894105V)

51. தம்பிப்பிள்ளை பரராஜசிங்கம்
505, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(500783780V)

# அருணன்ஸ்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

17. பரராஜசிங்கம் சந்திரகுமார்
505, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(500783780V)

18. சர்மிளா செல்வராசா
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
(816201390V)

19. வசந்தரூபி சாம்பசிவம்
374, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(558302011V)

20. ஆனைப்பிள்ளை ஜெயசீலன்
12, அடம்பன் வீதி,
யாழ்ப்பாணம்.
(413551412V)


இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில்!

ASIABIKE DELUXE

ஒறிஜினல்

Asia Bike Asia Bike



15 வருட கால இடைவெளிக்குப் பின்னர் இப்போது மீண்டும் யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஜப்பானிய உதிரிப் பாகங்களுடனும் தொழில்நுட்பத்தினுடனான ஒறிஜினல் ஏசியா சைக்கிள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கான

DELUXE The ALL-STEEL Bicycle

KING OF CYCLES

ஏசியா சைக்கிள்கள்

வாழ்நாள் முழுவதும் உத்தரவாதத்துடன் கூடிய சைக்கிள்

மற்றும் ஒறிஜினல் லுமாலா, ஹீரோ சைக்கிள்களும் ஒரே கூரையின் கீழ் விற்பனையாகின்றன!

ஈஸ்வரன் ரேடர்ஸ்

இல:.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222-2813

148, கண்டி வீதி, வவுனியா. T.P.: 02422497

132, டாம் வீதி, கொழும்பு -12 T.P.: 074 - 714312

(C/37096)

உங்கள் பணம் ஒரு தரமான பொருளுக்குச் செலவாகி உதவட்டும்



ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.10, 6.30 மட்டும்
RUSH HOUR 2
26 வரை - இரவு 9.10 இற்கு மட்டும்

நிர்மலா / ஆண்டான் அடிமை
சத்தியராஜ், சுவலட்சுமி நடித்த
ஆண்டான் அடிமை
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு.
HOLLOW MAN

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
சொக்கத்தங்கம்
(இனிய பாடல்கள் நிறைந்த திரைப்படம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00மணி (பு.நேரம்)

# மீட்கப்பட்ட 7,000 வெடி பொருள்கள் ஆனையிறவில் வெடிக்கவைப்பு

கிளிநொச்சி,மார்ச்25

ஆனையிறவுப் பகுதியில் கடந்த இருதினங்களாக மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் மீட்ட 7ஆயிரம் வெடி பொருள்கள் அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் மக்கள் மீளகுடியமர வசதியாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், கண்ணி அகற்றும் பணியில் முழுவீச்சில் பரவலாக ஈடுபட்டுள்ளனர்.

விசேட பயிற்சி அளிக்கப்பட்ட இரு அணியினர் ஆனையிறவுப் பகுதியில் கடந்த இருதினங்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் வெடிக்காத நிலையில் இருந்த 7ஆயிரம் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருள்களில் 8 எம்.எம் மோட்டார் ஷெல்கள், கவச எதிர்ப்பு ஷெல்கள், ஒளிர்வூட்டும் ஷெல்கள் ஆகியனவும் அடங்குகின்றன.

ஆனையிறவுப் பகுதியில் நேற்று மாலை 5.35 மணியளவில் தகர்க்கப்பட்ட வெடிபொருள்களின் விவரம் வருமாறு:-

ஏ.கே.ரவைகள் - 6,000, நடுத்தர ரவைகள் - 12, 60 மி.மீ.எறிகணைகள் - 152, 81 மி.மீ.எறிகணைகள் - 92, 82 மி.மீ.எறிகணைகள் - 50, 120 மி.மீ.எறிகணைகள் - 13, ஆர்.பி.ஜி.கவச எதிர்ப்பு எறிகணைகள் - 70, ஆர்.பி.ஜி. துருப்பு எதிர்ப்பு எறிகணைகள் - 24, 120 மி.மீ. பரா எறிகணை - 01, கைக்குண்டுகள் -147, 40 மி.மீ.எறிகணைகள் -74, 100 மி.மீ. புரொப்லர்கள் - 20, 152 மி.மீ.எறிகணைகள் - 08, ரி.69 மிதிவெடிகள் - 31, ஜொனி மிதிவெடிகள் - 05, பியூஸ்கள் - 300, 82 மி.மீ.பரா எறிகணைகள் - 07.

(ம-ரி)

## ஜப்பானில் இணக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் யாழ்நூலகத்துக்கு வழங்கும் இந்த நூல்களால் பலர் பயனடைய வேண்டும் என விரும்புகின்றோம் என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்துக்கான அன்பளிப்பு நூல்களைப் பெற்றுக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி பேசுகையில் -

இந்தியா எமது தாய்நாடு என்று ஆரம்பித்து இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளை விளக்கினார்.

தமிழ்நாடு எமது அயலில் உள்ள தாய்வீடு. அந்த வீடு அமைந்திருக்கும் இந்தியத் தாய்நாட்டை ஒதுக்கி விட்டு நாம் எதையும் சாதித்துவிட முடியாது.

பாரதியின் கனவு நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும் ஆனந்தசங்கரி கூறினார்.

யாழ்நூலகத்துக்கு இந்திய அரசு வழங்கிய நூல்களுக்காக இந்திய அரசுக்கும் இந்தியத் தூதுவருக்கும் ஆனந்தசங்கரி நன்றி கூறினார்.

முன்னாள் யாழ். மேயர் செல்லன் கந்தையன் பேசுகையில்:-

யாழ்.நூலகத்தை திறந்தால் இரத்த ஆறு ஓடும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் என்னை மிரட்டினார்கள் என்று கண்ணீர்மல்க உரையாற்றினார்.

நான் ஒதுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வந்தவன் என்பதற்காகவே நான் யாழ்நூலகத்தை திறந்து வைப்பதை பலர் விரும்பவில்லை.

நூலகத்தை திறக்க இருந்த வேளையில் இரவு நேரம் எனது வீட்டுக்கு மிரட்டல் கடிதம் வந்தது. எனது குடும்பத்தினர் இதனால் அச்சமுற்றனர்.

யாழ்.மாவட்டப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர்களும், மாணவர் அமைப்புமே மிரட்டல்களை விடுத்தனர். இப்படி ஒரு சூழ்நிலையில்தான் எனது மக்களின் நலன் கருதி நான் நூலகத்தை திறந்துவைக்கும் அந்த விடயத்தைக் கைவிட்டேன் என்றும் அவர் கூறினார்.

1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ்.நூலகம் இருபது வருடங்களின் பின் புனரமைக்கப்பட்டு 99 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்த நிலையிலும் அதைத் திறக்கவிடாமல் தடுத்த செயல் மனிதாபிமானமற்றது என்பதை தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன் என்று முன்னாள் மேயர் தளதளத்த குரலில் கூறினார். இந்த நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஆயிரத்து 392 நூல்கள் கையளிக்கப்பட்டன. அவற்றில் 800 நூல்கள் ஆங்கில நூலகளாகும்.

வைபவத்தின் இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், முன்னாள் யாழ்.நகர மேயர் செல்லன் கந்தையன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் இந்தியத் தூதருடன் சேர்ந்து படம் எடுத்துக்கொண்டனர்.

(ம-3)

## 15வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதாகக் கூறப்படுகிறது. பின்னர் அவர் அயலவர்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ். மகிந்தன் என்ற பிரஸ்தாப இளைஞர் பொலீஸாரால் நேற்று மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அடுத்து அவரை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்கு மாறு நதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுமியைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ம-10)

NEW SCIENCE HALL
MODEL TEST (பௌதிகவியல்)
(2003) by : R.குகனி (B.Sc.)
பௌதிகவியல I
01.04.2003 - நேரம் 8.30 - 10.30 (a.m.)
அதற்கான கருத்தரங்கு 11.00 - 1.10
பௌதிகவியல II
02.04.2003 - நேரம் 8.30 - 11.30 (a.m.)
அதற்கான கருத்தரங்கு 12.30 - 2.00
குறிப்பு:- பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் 30.03.2003 (ஞாயிறு) திகதிக்கு முன் பதிவு செய்யவும்.
(15931)

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணம் அண்ணியபுரிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி அவர்கள்.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (34984)

# இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் கூட்டத்தில் அரசியல் தலைவர்கள்

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த கூட்டத்தில் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். "ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தனக்கென அரசியல் கொள்கை ஒன்றை முன்வைத்தே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. இதனால்தான் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளில் இருந்து வேறுபட்ட தனித்துவ அரசியல் கொள்கைகளுடன் செயற்பட்டு வருகின்றோம்." இவ்வாறு கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

ஒன்றியத்தின் தலைவர் பி. மாணிக்கவாசகம் தலைமையில் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாநாடு நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த ஒன்றிய உறுப்பினர்களான ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து உரையாற்றுகையில் - ஆயுதவழி பொருத்தமானது அல்ல என்பதால் தான் ஈ.பி.டி.பி. ஜனநாயக வழியில் செயல்பட்டு வருகின்றது. ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலையில் திட்டமிட்ட குற்றச்சாட்டே எம்மீது சுமத்தப்பட்டு வருகின்றது என்றார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் உரையாற்றுகையில் - "பத்திரிகைகள் உண்மையான விமர்சனங்களை செய்யும்போது அதில் நான் குறை காண்பதில்லை. பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கவேண்டும். அதற்குத் தடையாக நாம் இருக்கமாட்டோம்" - என்றார். இலங்கை தமிழ் காங்கிரஸின் உபதலைவர் கலாநிதி குமரகுருபரன் உரையாற்றுகையில் நாம் ஆயுதம் ஏந்தாவிட்டாலும் யாரோ ஏந்திய ஆயுத பலத்தினால்தான் தமிழ் சமூகத்திற்கு இன்று அரசியல் பலம் கிடைத்திருக்கின்றது. அதன் விளைவாகவே இன்று சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்றார்.

ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இரா.துரைரத்தினம், உபதலைவர்கள் எம்.வரதராஜன், பீ.எம.லிங்கம், மு.தவச்செல்வம், செயலாளர் விசு கருணாநிதி, பொருளாளர் எஸ்.ஸ்ரீகஜன், இணைச் செயலாளர்கள் அனந்தபாலகிட்ணர், நிராஜ் டேவிட், செயற்குழு உறுப்பினர்களாக பி.ரவிவர்மன், ஏ.எல்.எம்.சலீம், க.குணராசா, திருமதி வில்விநாதன், ஏ.என்எஸ்.திருச்செல்வம், எஸ்.தில்லைநாதன், எஸ்.ஸ்ரீதரன், ரீ.விவேகராஜா, வரசொக்கன், எஸ்.இராஜேந்திரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர், நிறைவேற்றுக்குழு ஆலோசகர்களாக பீ. மாணிக்கவாசகம், ஆர்.பாரதி ஆகியோரும் தெரிவாகினர்.

(ம)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கம். மாறாகப் பேச்சுகளைக் குழப்பும் எவ்வித பின்னணியும் இதில் கிடையாதென அவர் மேலும் கூறினார்.

புத்தளம், கரம்பை மீள்குடியேற்றக் கிராமத்தில் வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

கவிக்குயில் ஏ.மன்சூர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறப்பு விழா நடைபெற்றது. (ம)

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து தொண்டர் ஆசிரியர் குழு ஒன்று திருகோணமலைக்குப் புறப்படவுள்ளதாகவும் அங்கு ஏனைய தொண்டர் ஆசிரியர் சங்கங்களுடன் இணைந்து வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கு முன்னால் மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. அங்கு மாகாணக்கல்வி அமைச்சு எமக்கு ஒரு சாதகமான முடிவைத் தராத பட்சத்தில் தாம் தொடர் மறியற்போராட்டங்களை நடத்தவும் தயாராக உள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. (ம-8-117-51)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கரை ஒதுங்கிய சடலங்களும் பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் -

இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்பது தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பில் உள்ள சீனத் தூதரக அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது. பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு நேற்றுச் சென்ற இந்த அதிகாரிகள் நீதிவான் உட்பட அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். (ம-3)

## சு.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இதுவரை பொதுவான விடயங்களில் மாத்திரமே இணக்கம் காணப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் ஏனைய முக்கிய விடயங்கள் குறித்து இதுவரை பேசப்படவில்லை. இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்பது ஜனாதிபதியினதும் சுதந்திரக் கட்சியினதும் நிலைப்பாடாகும்.

அந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அதில் எதுவித மாற்றமுமில்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம)

# மஹேல, சங்கக்கார, ஆர்னோல்ட் நீக்கம்! சனத் ஜயசூரிய தொடர்ந்தும் தலைவர்!!

இலங்கை அணியின் அணித் தலைவராக தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு சனத் ஜயசூரிய இணக்கம் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் அணித் தலைவர் பதவியிலிருந்து ஜயசூரிய இராஜினாமா செய்ய முன்வந்தார்.

2007 உலகக்கிண்ணப் போட்டியை கருத்தில்கொண்டு புதிய தலைவரை நியமிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதற்காக ஜயசூரிய இராஜினாமாச் செய்திருந்தார். இது தொடர்பான கடிதத்தை அவர் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அனுப்பியிருந்தார். எனினும் ஜயசூரியவின் இராஜினாமாவை அமைச்சரும் கிரிக்கெட் தேர்வுக் குழுவினரும் ஏற்க மறுத்தனர். அதனையடுத்து தொடர்ந்தும் அணித்தலைவராக நீடிப்பதற்கு ஜயசூரிய முன்வந்தார்.

இதேவேளை, சார்ஜா சுற்றுப் போட்டிக்கான அணியிலிருந்து குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்த்தன, ரஸல் ஆர்னோல்ட் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சார்ஜா போட்டிகளுக்கான அணி இன்னும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

எனினும், இவ்வணியிலிருந்து சங்கக்கார, மஹேல, ஆர்னோல்ட் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய வரிசை வீரர்களான இம்மூவரும் உலகக்கிண்ணத் தொடரில் பிரகாசிக்கவில்லை. மூவரும் இணைந்து மொத்தமாக 289 ஓட்டங்களையே பெற்றனர். (ம)

## ஹிக்கடுவ நகரசபை தலைவர் சுட்டுக்கொலை

ஹிக்கடுவ நகர சபைத்தலைவர் காமினி பின்னதுவ இனந்தெரியாத நபர்களினால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார். இனங்காணப்படாத ஆயுதங்கள் தரித்த இருவர் நேற்றுப்பிற்பகல் 1.30 மணியளவில் அவரது அலுவலகத்துள் நுழைந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது படுகாயமடைந்த அவர் பின்னர் மருத்துமனையில் உயிரிழந்தார். (ம)

## கர்ப்பிணிப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைக் காணவில்லை. இதனை அவதானித்த அயலவர்கள் சிலர் அவரது வீட்டுக்குள் நுழைந்து பார்த்துள்ளனர்.

அங்கே, மண்டையோடு பிளந்து மூளை வெளியேறிய நிலையில் இரத்த வெள்ளத்தில் அந்தப் பெண் கிடப்பதைக் கண்டுள்ளனர். அருகிலேயே கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கோடரியும் கிடந்துள்ளது.

இது குறித்து உடனடியாக ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து பெண்ணின் கணவர் தலைமறைவாகிவிட்டார். பின்னர் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் விடுதலைப் புலிகள் கண்டுபிடித்தனர். அம்பலப்புல என்ற இடத்தில் மறைந்திருந்த சமயம் அவர் பிடிக்கப்பட்டார்.

பின்னர் அவர் விடுதலைப் புலிகளால் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஊடாக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தை அப்பகுதிக் கிராமசேவையாளர், ஊர்காவற்றுறை பொலீஸ் அதிகாரி ஜனககுணதிலக, பொலீஸ் நிலையப்பொறுப்பதிகாரி கொஸ்வரே ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ம-16)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு - யாழ்ப்பாணம்
பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.